1-12-53

கண்ணன்

169

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

கேட்டீர்களா!

நேரு ஜயந்தி

நவம்பர் மாதம் 14-ஆம் தேதிதான் ஜவாஹர் பிறந்த நாள். நாடெங்கும் அவர் பிறந்த நாளைக் குதூகலமாகக் கொண்டாடினர்கள். டில்லி நாஷனல் ஸ்டேடியத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் நேருவின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர்.

புதிய மேயர்

சென்னை நகரின் புதிய மேயராக ஸ்ரீ பி. பரமேஸ்வரன், (எம். எல். ஏ.) என்ற ஹரிஜனப் பிரமுகர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் முன்னுள் கிராமாபிவிருத்தி மந்திரியாக இருந்தவர். டெபுடி மேயராக ஸ்ரீ டி. வேணுகோபால ராவ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஸ்ரீ வாஸனுக்குப் பாராட்டு

ஔவையார் படத்தைச் சிறப்பாகத் தயாரித்து, கலையுலகில் ஓர் அரிய சாதனை புரிந்ததற்காக, சென்னை மேயர் செங்கல்வராயன் ஸ்ரீ வாஸனுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினர். ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் தலைமையில் இந்த விழா பெரிய அளவில் நடைபெற்றது. விழாவுக்கு ராஜாஜி, யு. கிருஷ்ணராவ், ராஜாராம் நாயுடு ஆகிய மந்திரிகளும் பல பிரமுகர்களும் வந்திருந்தனர். ஸ்ரீ வாஸனுக்குப் பாராட்டு விழாக் கமிட்டியினரால் ஒரு பெரிய ஷீல்டு வழங்கப்பட்டது.

ஹைஸ்கூல் கண் காட்சி

வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை ஹைஸ்கூலில் சென்ற மாதம் ஒரு கண்காட்சி நடைபெற்றது. மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் செய்த பல அரிய பொருள்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. சித்திரப் பகுதியும் மாடல் கிராமப் பகுதியும் குறிப்பிடத் தகுந்தவை. பொதுவாக எல்லாப் பகுதிகளுமே மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்ததை அறிந்து அதன் நிர்வாகிகளையும் தலைமையாசிரியரையும் பாராட்டுகிறோம்.

குடகுப் பெண் தனலக்ஷ்மி

சென்ற ஒன்றரை வருஷங்களாக அன்ன ஆகாரம் இல்லாமல் பசியாத நிலையில் இருந்த குடகுப் பெண் தனலக்ஷ்மியைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவளைப் பரிசோதனை செய்ய இந்திய சர்க்கார் முன் வந்தார்கள். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட மூன்றும் நாளே அவளுக்குப் பசி எடுத்துவிட்டது. முதலில் காபி சாப்பிட்டாள். பிறகு ஆகாரமே சாப்பிடத் தொடங்கிவிட்டாள். அவள் சாப்பிடாமல் இருந்ததெல்லாம் வெறும் கதைதானே என்று கூடப் பலர் எண்ணுகிறார்கள். மீண்டும் அவள் ஆகாரத்தைத் தொட்டுக்கூடப் பார்க்காத நிலைமை ஏற்படலாம் என்று தனலக்ஷ்மியின் பெற்றோர் கூறுகிறார்கள். போகப் போகத்தான் உண்மை எதுவென்று சரியாகத் தெரியும்.

OFFICE OF THE REGISTRAR
16 JAN 1954
21178

பொருளடக்கம்

மலர்: 4 **இதழ்: 17**

1-12-'53

குழந்தைகளே! பக்கம் .. 2
அசட்டுப் பிச்சு .. 3
முதல் பரிசு .. 8
எழுத்தாளர் ஏகாம்பரம் .. 9
கஜபதியின் கடிதம் .. 18
தலைவிதி .. 19
பள்ளிக்கூடம் முடிகிறது .. 20
சினிமாவிலே .. 21
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 27
கூட்டாளி .. 29
மாஸ்டர் பாலகுமார் .. 34
தூண்டில் முள் .. 35
கேட்டீர்களா? -
இரண்டாவது அட்டை
கண்ணன் தபால்
மூன்றாவது அட்டை

வருஷ சந்தா ரூ. 3/-
கலைமகள், மஞ்சரி கண்ணன்,
மூன்றும் சேர்ந்த
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

டில்லியில் முதல் டெஸ்ட்

முதல் டெஸ்ட் மாட்சு என்பதைவிட முதல் தரமான டெஸ்ட் மாட்சு என்றுதான் இந்தியாவில் வர் ஜூபிலிக் கொண்டாட்டத்தை ஒட்டி நடைபெறும் மாட்சைக் குறிப்பிடவேண்டும். இந்தியாவுக்கும் காமன்வெல்த் கோஷ்டிக்கும் முதல் டெஸ்ட் மாட்சு முதலில் தலை நகர் டில்லியில் ஆரம்பமாயிற்று. இந்தியா கோஷ்டிக்கு உம்ரிகர் காப்டன். காமன்வெல்த் கோஷ்டிக்குப் பார்னெட் காப்டன்.

ஆரம்பமுதலே அதிர்ஷ்டம் இந்தியாவின் பங்கிலேயே இருந்தது. முதலில் ஆடப் புகுந்த இந்தியா இரண்டு நாட்கள் ஆடி 387 ரன்கள் எடுத்தது. மஞ்ரேகர் 86 ரன்களும் ராம்சந்த் 119 ரன்களும் எடுத்தது குறிப்பிடத் தக்கது.

பிறகு காமன்வெல்த் கோஷ்டி ஆடத்தொடங்கியது. முதல் ஆட்டத்தில் 198 ரன்கள் எடுத்து ஆல் அவுட்டானார்கள். எனவே இந்தியா இரண்டாவது இன்னிங்ஸ் ஆடாமல் மீண்டும் காமன்வெல்த் கோஷ்டியே இரண்டாவது இன்னிங்ஸ் ஆடும்படி விட்டுவிட்டார்கள். குப்தேயும் குலாம் அகமதும் போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொரு விக்கட்டுகளாக வீழ்த்தி எறிந்துவிட்டார்கள். இரண்டாவது இன்னிங்ஸில் காமன்வெல்த் கோஷ்டியினால் 174 ரன்களே எடுக்க முடிந்தது. 15 ரன் இன்னிங்ஸ் வித்தியாசத்துடன் காமன்வெல்த் கோஷ்டியை இந்தியா முறியடித்தது. குப்தே 12 விக்கெட்டுகளையும் குலாம் அகமது 8 விக்கெட்டுகளையும் இரண்டு இன்னிங்ஸ்களிலுமாக வீழ்த்தி வெற்றிவாகை சூடியிருக்கிறார்கள்!

—வி.

குழந்தைகளே!

உங்களையெல்லாம் எப்படிப் பாராட்டுவது என்றே எனக்குத் தெரியவில்லை. 'கண்ணினும் அரிய மலர்' என்று கண்ணன் தீபாவளி மலரைப் போற்றியிருக்கிறீர்கள். இவ்வளவு பாராட்டுதல்களும் எங்களுக்கு அல்ல; அவ்வளவும் உங்களையே சாரும்.

உங்களுடைய அன்பும் உற்சாகமும் இல்லாவிட்டால் மலர் இத்தனைச் சிறப்பாக எப்படி அமைந்திருக்கப்போகிறது! குழந்தைகளுடைய சித்திரங்களையும் வெட்டி ஒட்டும் மூவர்ணப் படத்தையும் சர்க்கஸ் காட்சிகளையும் பால நட்சத்திரங்களின் புகைப்படப் பகுதிகளையும் பாராட்டாத குழந்தைகளே இல்லை. ராஜாஜியின் கதையையும் மற்ற அன்பர்களின் கதைகளையும் பாடல்களையும் தனித்தனியாகக் குறிப்பிட்டு நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்திருக்கின்றன. மாதிரிக்காகச் சிலவற்றை மட்டும் கண்ணன் தபால் பகுதியில் வெளியிட்டிருக்கிறேன். எல்லாவற்றையும் பிரசுரிக்க இடமில்லையே என்று வருந்துகிறேன். குழந்தைகள் மட்டும் அல்லாது ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாராட்ட முந்திக்கொண்டு வந்திருப்பது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. கண்ணன் உங்கள் உள்ளத்திலே அகலாத ஒரு தனி இடம் பெற்றுவிட்டான் என்பதற்கு வேறு ருசுவே தேவையில்லை. தீபாவளி கழிந்த பின்பும் மலர் வேண்டும் என்று எழுதுகிற நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்காக நான் வருத்தப்படுகிறேன். ஒரு மலர்கூட இல்லையே, நாங்கள் என்ன செய்வது? இனி அடுத்த வருஷம் தீபாவளி வந்தால்தான் மலர்! அதற்காகத்தான் முந்தியே எச்சரித்திருந்தேன். நீங்கள் கவனிக்காமல் இருந்துவிட்டு இப்பொழுது வேண்டும் என்றால் எங்கே போவது? உங்கள் நண்பர்களைக் கேட்டு இரவலாக வாங்கிப் பாருங்கள். அவ்வளவுதான் நான் சொல்லக்கூடியது.

கண்ணன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணபிரானைப் போலவே வளர்ந்து வருகிறான். எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்து வருகிறான். வருகிற ஜனவரி முதல் கண்ணனில் புது மாதிரியான மாறுதல்களையும் அபிவிருத்திகளையும் காண்பீர்கள். அற்புதமான புதிய தொடர் கதை ஒன்று ஆரம்பமாகப் போகிறது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் ஜனவரி இதழில் நம் சென்னை ராஜ்ய கவர்னர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா தம் இளமை நினைவுகளை எழுதுகிறார். உங்களுக்கு இன்னும் என்ன வேண்டும்? ஏதாவது இருந்தால் எழுதுங்கள்.

—ஆசிரியர்.

அசட்டுப் பிச்சு விழித்தது மகா பரிதாபமாக இருந்தது. ரெயில்வே கார்டு இப்போது முன்னால் வந்தார். அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். அவருக்கு உடனே என்ன தோன்றிற்றோ, என்னவோ? அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி, "தம்பி, உன் வயசு என்ன?" என்றார்.

"பதினைஞ்சு முடிந்து பதினாறு ஆரம்பம்" என்றான் பிச்சு.

"ஓ! இந்தச் சங்கிலியை உன்னால் இழுத்திருக்க முடியாது. வேறு யாரோதான் விஷமம் செய்திருக்கிறார்கள். அப்படித்தானே தம்பி?" என்றார்.

"அங்கே ஒருவன் படுத்திருந்தான். அவன் பெரிய திருடன். அவனாகத்தான் இருக்கும்!" என்றான் பிச்சு.

அவன் வார்த்தைகளை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஆனால் அந்த ரெயில்வே போலீஸ்காரன் முகத்தைச் சுளித்துக் கொண்டான். பிச்சுவின் வார்த்தைகளை அவன் சிறிதும் நம்பினதாகத் தெரியவில்லை. சரியான கேஸ் ஒன்று மாட்டிக் கொண்டுவிட்டதாக அவன் சந்தோஷப்பட்டான்.

"சரி; நீ யாரு? அந்தப் பெரிய திருடனுடைய கையாள்தானே? இல்லாட்டா மூணாங்கிளாஸ் டிக்கட்டை வாங்கிக்கொண்டு 'இண்ட'ரிலே வருவியா நீ?"

அசட்டுப் பிச்சு பதில் சொல்லவில்லை. சொல்லி என்ன பிரயோஜனம்?

ஒன்று மட்டும் சொன்னான்;

"எனக்கு வந்த தந்தியைக் கூடக் காணோம். அவன்தான் எடுத்திருப்பான்!"

இதைக் கேட்டதும் எல்லாரும் கேலியாகச் சிரித்தார்கள். போலீஸ்காரன் மட்டும், "பையன் பெரிய ஆளாக இருப்பான் போலிருக்கிறது!" என்றான்.

பிறகு அவர்கள் தமக்குள்ளாகவே பேசிக்கொண்டார்கள். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்களாக அசட்டுப் பிச்சுவை அழைத்துக்கொண்டு கார்டு வண்டிக்குப் போனார்கள். அடுத்த ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் வண்டி அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டது.

கார்டு வண்டியில் உட்கார்ந்திருந்த பிச்சு அந்தப் பிரதேசத்தை நன்றாகக் கவனித்துக்

கொண்டான். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் இரண்டு பக்கமும் ஒரே பொட்டல் காடாக இருந்தது. பிறகு ரெயில்வே கார்டைப் பார்த்து, "ஸார்! நான் நிரபராதி, ஸார்! எனக்கு ஒன்றுமே தெரியாது, ஸார்! நீங்க நிஜமாகவே நம்பறீங்களா, ஸார்" என்றான்.

ரெயில்வே கார்டு கொஞ்சம் இளகிய மனமுடையவர் என்று பேச்சு வளர வளரத் தெரிந்தது. அவரிடம் தந்தி வந்தது முதல் வண்டி நின்றது வரையில் நடந்தவற்றையெல்லாம் கூறினான் பிச்சு. கார்டு மிகுந்த அநுதாபத்துடன் கேட்டுக்கொண்டு வந்தார்.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது. அது எக்ஸ்பிரஸ் வண்டியானதால் சாதாரணமாக ஜங்ஷனில்தான் நிற்கும். சின்ன ஸ்டேஷனில் நிற்பதில்லை. இன்று தன்னை முன்னிட்டுத்தான் நிற்கிறது என்று பிச்சு ஊகித்துக் கொண்டான்.

"சரி, வா போகலாம்!" என்று கார்டு அவனை அழைத்துக் கொண்டு ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குள் போனார். பின்னால் அந்தப் போலீஸ்காரனும் வந்தான்.

கார்டு ஸ்டேஷன் மாஸ்டர் காதில் என்னவோ சொன்னார். ஸ்டேஷன் மாஸ்டர், 'கட்டுக் கட கட' என்று தந்திக் கட்டையில் அடித்தார். சற்றுப் பொறுத்து, 'கட்டுக் கட கட கட்டுக்—' என்று தந்திக் கட்டை மூலமாகவே பதில் வந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் அதைக் கேட்டு ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டார். "அடுத்த ஜங்ஷனில் பதில் தருகிறோம்" என்று அதில் கண்டிருந்தது.

பிச்சு பின்னாலிருந்த பெஞ்சில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். ஸ்டேஷன் மாஸ்டர் எழுதியிருந்ததைப் படித்த கார்டு, "சரி ரொம்பத் தாங்ஸ்-நான் இவனைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு வண்டிக்குப் பிச்சுவை அழைத்துப் போனார். பிச்சு ஒன்றும் தெரிந்து கொள்ளாதவன்போல இருந்துவிட்டான்.

'எங்கே போனாலும் வீண் வம்பு வந்து சேர்ந்து விடுகிறதே!' என்று பிச்சு கவலைப்பட்டான்.

"ஸார்! நான் மூன்றாம் வகுப்பு வண்டியிலேயே வருகிறேன். வந்த வரையில் இண்டர் வகுப்புக் கட்டணத்தைச் செலுத்தி விடுகிறேன்" என்றான். கார்டும் போலீஸ்காரனும் இதற்கு ஒப்பவில்லை. "பரவாயில்லை, நீ வந்த பெட்டியிலேயே வரலாம்" என்றார் கார்டு.

பிச்சு பதில் பேசாமல் வண்டியினுள் ஏறி உட்கார்ந்துகொண்டான். போலீஸ்காரனும் அவனுக்குத் துணையாக ஏறி உட்கார்ந்துகொண்டான்.

பிச்சுவுக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை. அதையும் தவிர அந்தப் போலீஸ்காரன் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பாமல் தன்மீது குற்றம் சாட்டியதுபற்றி எரிச்சலாகவும் இருந்தது. இவனை வேடிக்கைக்காகக் காபரா செய்துவிடுவது என்று முடிவு கட்டிக் கொண்டான். எப்படியும் எழும்பூர் வந்தால் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் மனசுக்குள். மெதுவாகப் போலீஸ்காரனைப் பார்த்து, "தந்தியடித்தாரே



கார்டு, என்ன பதில் வந்தது?'' என்றான் பிச்சு.

''உன்னைக் கைப் பிடியாகக் கொண்டு வரும்படி தந்தி வந்திருக்கிறது!''

''என்னையா, உன்னையா?'' என்றான் பிச்சு ஏக வசனத்தில்.

போலீஸ்காரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. விழிகளை உருட்டிப் பார்த்தான்.

''நான் யார் தெரியுமா, உனக்கு?'' என்றான் பிச்சு.

''தெரியாது.''

''நானும் உன்னைப் போலத்தான். செல்லமுத்துவுக்குக் கையாள்தான்!''

''டேய் தம்பி! என்ன ஒரே யடியா ஓட்டறே வண்டியை! செல்லமுத்துவா? யார் அந்தச் செல்லமுத்து என்கிற பயல்?''

''என்னப்பா தெரியாதவன் மாதிரி பேசறே? சங்கிலியைப் பிடித்து இழுத்து வண்டியை நிறுத்தினது உனக்குத் தெரியாது?''

''எனக்கா? எனக்குத் தெரியுமின்னு சொல்றே நீ?''

''ஆமாம்; அப்படித்தான் சொல்றேன். கார்டு வண்டியிலே வந்தப்போ கார்டு கிட்டேயும் அப்படித்தான் சொல்லிட்டேன்!''

''என்ன அது?''

''என்ன திடுக்கிடறயே! அவர் கேட்டார்! உண்மையைச் சொன்னேன். எனக்கு என்ன தெரியும்? அவர்கிட்டே சொன்னதாக உங்கிட்டேகூடச் சொல்ல வேண்டாம் என்றார். மனசு கேக்கல்லே. சொல்லிப்புட்டேன்!''

''ஐயையோ! அபாண்டமா இருக்கே?''

பிச்சு 'கெக்கெக்கே' என்று சிரித்தான். 'ஐயையே, பயந்துட்டியே அதுக்குள்ளே!' என்பதுபோலத்

தான் சிரித்தான். ஆனால் போலீஸ்காரன் வேறு விதமாக அதற்கு அர்த்தம் செய்துகொண்டு விட்டான்.

"டேய், உன்னை இப்போ இந்த வண்டியிலேருந்து வெளியிலே தூக்கி விட்டெறிஞ்சுடப் போறேன். அயோக்கியப் பயலே!" என்று பிச்சுவின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான் போலீஸ்காரன்.

"சங்கிலியைப் புடிச்சு இழுத்துடுவேன்; ஏதாவது பேசினியோ?" என்றான் பிச்சு கையைத் திமிறிக்கொண்டு.

போலீஸ்காரன் உண்மையில் பயந்துவிட்டான்.

"முந்தியும் நான்தான் சங்கிலியைப் புடிச்சு இழுத்தேன்!" என்றான் பிச்சு.

"அப்போ செல்லமுத்து எங்கே?"

"தூங்கறப்போ கீழே உருட்டித் தள்ளிப்புட்டேன்!"

"அடப்பாவி! அப்புறம்?"

"அப்புறம் என்ன? உன்னைப் பற்றியும்தான் கார்டுகிட்டே சொல்லிப்புட்டேனே!"

"என்னன்னு சொல்லிப் புட்டே?"

"இந்தப் போலீஸ்காரன் செல்லமுத்துவுக்கு உடைந்தைன்னு தான்!"

இவ்வளவு சின்னப் பையன் எப்படி இதையெல்லாம் பேசுகிறான் என்று போலீஸ்காரனுக்குப் பெரு வியப்பாக இருந்தது. அவனை என்ன செய்வது என்றும் புரியவில்லை. இவன் பேசுவதைப் பிறர் கேட்டால் அப்படியே நம்பி விடுவார்களே என்றுகூட ஒரே கவலையாக இருந்தது. போலீஸ்காரன் பயப்படுவதைப் பார்த்த பிச்சுவுக்கு வேறு எண்ணம் உண்டாயிற்று. விளையாட்டுக்காகச் சொல்லப் போக, உண்மையில் இவனுக்கு ஏதோ சம்பந்தம் இருக்கும் போலிருக்கிறதே என்று தோன்றிற்று. அதற்கு ஏற்றாற்போல் போலீஸ்காரன் பிச்சுவைப் பார்த்து, "உனக்குச் செல்லமுத்து என்கிறவனை எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"அவனுக்கு நான் ஒரு பாங்க் கொள்ளைக் கேஸில் உளவு சொல்லிக் கொடுத்திருக்கிறேன்!"

"அப்படியா? அப்படியானால் உன் பெயர் என்ன?"

"என் பெயர் ஏ. பிச்சு."

இந்தப் பெயரைக் கேட்டதும் உண்மையில் போலீஸ்காரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"எந்தப் பிச்சு? நங்கவரம் பிச்சுவா?"

பிச்சு வெகு அலட்சியமாக, "ஆமாம்" என்றான்.

அடுத்த கணம் போலீஸ்காரன் அவன் கைகள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "தம்பி! என்னை மன்னித்து விடு! தெரியாமல் இருந்துவிட்டேன். என்னை மன்னித்தேன் என்று சொல்!" என்று அழமாட்டாத குறையாகக் கெஞ்சினான்.

'ஏது, என் பெயருக்கு இவ்வளவு மகத்துவம்கூட இருக்கிறதே—' என்றுபிச்சுமனத்துக்குள் எண்ணிப் பெருமைப்பட்டுக்கொண்டான்.

இதற்குள் வண்டி அடுத்த ஜங்ஷனில் வந்து நிற்கவே, "இதோ வந்து விட்டேன். போய்க் கையெழுத்து வாங்கணும்" என்று சொல்லிவிட்டு அவன் கீழேயிறங்கி ஓடினான்.

பிச்சு கண்ணை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டான்.

பொல பொலவென்று விடியும் சமயத்தில் வண்டி எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றது. அப்போதுதான் பிச்சு கண் விழித்துக்கொண்டான். பிளாட்பாரத்தில் இன்ஸ்பெக்டர் குரூப் மோட்டார் சைக்கிளுடன் காத்துக்கொண்டு நின்றார்.

பிச்சு அவரைக் கண்டதும், "ஹலோ! இதோ இந்த வண்டியிலே இருக்கேன்-" என்று கையை விசிறிக் காட்டினன்.

வண்டி நின்றதும் கார்டு வந்து, "வா தம்பி! ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்த பிறகு போகலாம்" என்றார்.

அதற்குள் இன்ஸ்பெக்டர் குரூப் முன்னால் வந்து, "எனக்குப் போன் வந்தது. அந்தப் பையன் சொன்னது சரியான விவரங்களே!" என்றார். அப்போது அங்கே வந்த ஸ்டேஷன் அதிகாரிகள், "சரி, அவனை விட்டு விடுங்கள்!" என்று கார்டுக்கு ஆலோசனை கூறினர்கள்.

பிச்சுவின் கண்கள் வேறு யாரையோ பிளாட்பாரத்தில் தேடிக் கொண்டிருந்தன. ஆனல் ஏமாற்றம்தான்; அந்தப் போலீஸ்காரனைக் காணவேயில்லை!

பிச்சு வழியாக அடையாற்றை நோக்கிச் சென்றது மோட்டார் சைக்கிள்! பிச்சு ஜம்மென்று பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு வந்தான். இருவரும் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசிக்கொள்ளவில்லை.

(தொடரும்)




முதல் பரிசு
1
2
3
4
5
6

எழுத்தாளர் ஏகாம்பரம்

பூவண்ணன்

எழுத்தாளர் ஏகாம்பரத்தைத் திருவல்லிக்கேணியில் அறியாதவர்கள் மிகச் சிலர்தான். (ஐயையோ, மிகச் சிலர் என்று எழுதிவிட்டேன்? இது தெரிந்தால் ஏகாம்பரம் என் உயிரை எடுத்துவிடுவாரே. இல்லை! இல்லை! நான் எழுதியது தப்பு! எழுத்தாளர் ஏகாம்பரத்தை அறியாதவர்களே அங்கு இல்லை. அவர் நிறையப் படிப்பார்; நிறையப் பேசுவார்; நிறைய எழுதுவார். அவரிடம் மாட்டிக்கொண்டவர்கள், அவர் பேச்சைக் கேட்டுக் கேட்டு மூளை குழம்பிவிடுமே என்று பயப்படுவார்கள். பிறர் பேசுவதைப் பார்த்தாலும், அவருக்காக வருத்தப்படுவார்கள்.

அவரிடம் அதிகமான பேர் வழிகள் வந்து, வெகு நேரம் பேசிக்கொண்டிருக்கவேண்டும் என்று விரும்புபவர் ஒரே ஒருவர்தான்! அவர்தான் ஏகாம்பரத்தின் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் வெற்றிலை பாக்குக் கடைக்காரர். ஏனென்றால் அதனால் அவருக்கு நிறைய லாபம். ஏகாம்பரத்தின் வீட்டிற்கு வந்து அவரிடம் பேசிவிட்டு வெளியே வருபவர்கள் அவர் கடையில் குறைந்த பட்சம் இரண்டரையணா விலையிலிருக்கும் 'பஹதூர் பாம்' வாங்காமல் செல்வதில்லை! (பஹதூர் பாம் என்பது தலைவலித் தைலம்.)

இவ்வளவு பேரும் புகழும் படைத்த ஏகாம்பரம் என் நண்பர்.

அவர் தினமும் கதைகள் எழுதி எந்தப் பத்திரிகைக்காவது அனுப்பிக்கொண்டே இருப்பார். அவரது விடாமுயற்சியைக் கண்டு பிரமிக்காத பத்திரிகாசிரியர்களே இல்லை எனலாம். சில பத்திரிகைகளில் அவரது கதைகள் வெளிவந்திருந்தன.

அவர் நிறையப் பழைய பத்திரிகைகள், புத்தகங்கள் வாங்குவார். இதனால் எல்லாப் பழைய பத்திரிகைக் கடைக்காரருக்கும் ஏகாம்பரத்தை நன்றாகத் தெரிந்திருந்தது. ஏகாம்பரம் பழையபத்திரிகைகள் வாங்குவதில் திறமைசாலி! மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்குவார். வாங்கும் பத்திரிகைகளை எவரிடமும் தரமாட்டார். எனக்குக்கூடத் தரமாட்டார். 'படிப்பதற்கில்லை! பார்த்துவிட்டுத் தருகிறேன்' என்றாலும் தரமாட்டார்.

பழைய பத்திரிகை தரவில்லை என்பதால் இவர் கருமி, சுயநலக்காரர் என்றெல்லாம் எண்ண வேண்டாம். அவரிடமுள்ள புதிய பத்திரிகைகள், புத்தகங்களைத் தாராளமாகத் தருவார்.

ஒரு நாள் ஏகாம்பரத்துடன் நான் கடற்கரைக்குச் சென்றேன். திரும்பி வரும்போது ஏகாம்பரம் ஒரு பழைய பத்திரிகைக் கடையில் நின்றார். நானும் நின்றேன். கீழே இருந்த பத்திரிகைகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டி, ''இதில் தான் நான் எழுதிய 'வெண்கலச் சிலை' என்ற கதை வெளிவந்திருக்கிறது'' என்று கூறினார். ஏகாம்பரத்தின் வெண்கலச் சிலை மிக நன்றாக இருப்பதாக என் நண்பன் ஒருவன் சொல்லியிருந்தான். அது உடனே என் நினைவுக்கு வந்தது. நான் அந்தப் பத்திரிகையை எடுத்தேன். ''இதன் விலை என்ன?'' என்று கேட்டேன். கடைக்காரன் ஐந்தணா சொன்னான். அதன் புது விலையே எட்டணாதான். அதை எவ்வளவுக்குக் கேட்கலாம் என்று யோசித்துக்கொண் டிருக்கும் போது, ஏகாம்பரம் என் கையிலிருந்த பத்திரிகையை வாங்கிப் புரட்டினார். உடனே அந்தப் பத்திரிகையைக் கடையில் வீசி எறிந்துவிட்டு, ''இதை வாங்காதே! வா போகலாம்'' என்றார். அவர் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. ''ஐந்தணாவாம்! அநியாய விலை! என்னிடம் இந்த இதழ் இரண்டிருக்கிறது. உனக்கு ஒன்று தருகிறேன்! வா, போகலாம்'' என்று கூறிவிட்டு என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்.

சிறிது தூரம் சென்றதும் நின்றார். எதையோ எண்ணினார். மறு நிமிஷம், ''கொஞ்சம் இங்கே நில்; வருகிறேன்'' என்று கூறி விட்டுத் திரும்பிச் சென்றார். நான் அங்கேயே நிற்காமல் அவர் பின்னே சென்றேன். ஏகாம்பரம் மீண்டும் பழைய கடைக்குச் சென்றார். என்னை வாங்க வேண்டாம் என்று கூறிய அதே பத்திரிகையைப் பேரம் பேசாமல் ஐந்தணா கொடுத்து வாங்கிக்கொண்டு திரும்பி வந்தார். நான் அவருடன் நடந்தேன். ''ஏகாம்பரம், என்னை வாங்காதே என்று கூறி விட்டு நீர் மட்டும் வாங்கலாமா? அதுவும் அதே ஐந்தணா விலைக்கு?'' என்று கேட்டேன். ஏகாம்பரம் பதிலே சொல்லவில்லை.

மறு வாரம் அவரே 'வெண்கலச் சிலை' கதை வெளிவந்த இதழைக்

கொடுத்தார். ஆனால் அது பழைய பத்திரிகைக் கடையில் வாங்கியதல்ல! நான் கதையைப் பார்த்தேன்! மிக நன்றாக இருந்தது. 'அடடா! இவ்வளவு நல்ல கதை எழுதும் ஏகாம்பரத்தின் கதைகளைச் சில ஆசிரியர்கள் திருப்பி அனுப்பிவிடுகிறார்களே!' என்று வருத்தப் பட்டேன்.

சில மாதங்கள் சென்றன. முன்பெல்லாம் ஏகாம்பரத்தின் கதைகளைப் படிப்பதில்லை. ஆனால் இப்போது ஏகாம்பரம் எழுதும் எல்லாக் கதைகளையும் கையெழுத்துப் பிரதியாக இருக்கும்போதே படித்து விடுவேன். அவைகளில் சில மிக மிக நன்றாக இருக்கும்! சில மிக மிக மோசமாக இருக்கும். பத்திரிகாசிரியர்கள் எல்லாவற்றையும் திருப்பி அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். அதனுடன் கடிதமும் வரும். அதைப் படிக்கத் தரமாட்டார் ஏகாம்பரம்!

ஒருநாள் ஏகாம்பரத்தின் அறையில் உட்கார்ந்திருந்தேன். ஏகாம்பரம் என்னை அங்கேயே இருக்கும்படி கூறிவிட்டு, கடைக்குப் போனார். சிறிது நேரம் கழித்ததும் 'தொப்' என்று ஒரு பத்திரிகைக் கட்டு என் முன் விழுந்தது. நான் நிமிர்ந்து பார்த்தேன். உயரத்தில் பலகையில் பல பத்திரிகைக் கட்டுகள் இருந்தன. அங்கு ஓர் எலி என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தது! கட்டைத் தள்ளியது உயர்திரு எலியார்தான் என்பதைத்

தெரிந்து கொண்டேன். அதைப் பலகையில் வைக்க எடுத்தேன். கட்டின்மேலிருந்த முதல் பத்திரிகையைப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அது ஏகாம்பரம் ஐந்தணா கொடுத்து வாங்கிய 'வெண்கலச் சிலை' என்ற கதை இருக்கும் இதழ்தான்.

நான் உடனே கட்டை அவிழ்த்து அந்தப் பத்திரிகையைப் பிரித்து, வெண்கலச் சிலைக் கதையைப் பார்த்தேன். அதில் யாரோ பேனாவினால் எதையோ எழுதியிருந்தார். அதைப் படித்ததும், ஏகாம்பரம் ஏன் என்னை அதை வாங்க வேண்டாம் என்று கூறினார் என்பதும், அவர் ஏன் அதை அதிக விலை கொடுத்து வாங்கினார் என்பதும் புரிந்துவிட்டது! அதில் என்ன எழுதியிருந்தது, தெரியுமா? நீங்களே படித்துப் பாருங்கள்:

''இந்த 'வெண்கலச் சிலை'க் கதை மிக மிக நன்றாக இருக்கிறது! ஆனால் இதை உண்மையில் ஏகாம்பரமா எழுதினார்? பத்து வருடங்களுக்கு முன் 'மனோரஞ்சிதம்' பத்திரிகையில் காலஞ்சென்ற பிரபல எழுத்தாளர் க. ரா. கண்ணன் என்பவர் எழுதிய 'பொற் சிலை' என்ற கதையை அப்படியே ஏகாம்பரம் காப்பியடித்திருக்கிறார். பொற்சிலை என்பதை மட்டும் வெண்கலச் சிலையாக மாற்றியிருக்கிறார். இந்தத் திருட்டுப் பிழைப்பைவிட கேவலமானது வேறு என்ன இருக்கிறது? - என். கே.''

யாரோ உணர்ச்சிவசப்பட்ட வாசகர் தன் கருத்தை அந்தக் கதையிருந்த பக்கத்தில் எழுதியிருந்தார். இந்தப் பத்திரிகையை நான் வாங்கினால் அவர் குட்டு வெளிப்பட்டுவிடுமல்லவா? அதனால் என்னை வாங்க விடவில்லை. அதை வேறு யாராவது வாங்கினாலும் அவர் 'யோக்கியதை' தெரிந்துவிடுமே என்று அவரே அதிக விலைக்கு வாங்கிக்கொண்டார்.

அந்தக் கட்டில் பழைய 'மனோரஞ்சிதம்' இதழ்கள் பல இருந்தன. அவற்றில் 'மார்க்' செய்திருந்த ஓரிரு கதைகளை உடனடியாகப் படித்துவிட்டு, அதை முன்போல் கட்டி, பலகைமேல் வைத்துவிட்டேன். நான் படித்த கதைகள், ஏகாம்பரம் தாம் எழுதியதாக என்னிடம் கொடுத்த கதைகளைப் பெரும்பாலும் ஒத்திருந்தன! நன்றாக இருந்த கதைகள் எல்லாம் காப்பியடித்தவை. மோசமாக இருந்தவை அவர் எழுதிய சொந்தக் கதைகள் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன்.

அதற்குள் ஏகாம்பரம் கடைக்குப்போய்வந்துவிட்டார். ''வெகு நேரம் காக்க வைத்துவிட்டேன்'' என்று கூறிக்கொண்டே என்னருகில் அமர்ந்தார். அவர் புதிதாக எழுதிய சில கதைகளைப் படித்துப் பார்க்கும்படி என்னிடம் தந்தார். நான் அவற்றை வாங்கவில்லை! ''ஏகாம்பரம்! நான் பழைய மனோரஞ்சிதம் இதழ்களை ஏற்கனவே படித்திருக்கிறேன். ஆகவே இவற்றைப் படிக்க வேண்டிய அவசியமில்லை'' என்றேன். ஏகாம்பரம் திகைப்பால் சிலையானார்.

இப்போதெல்லாம் எழுத்தாளர் ஏகாம்பரம் என்னிடம் தம் கதைகளைப் படிக்கும்படி தருவதில்லை!

கஜபதியின் கடிதம்

வாண்டுமாமா

"சிங்காரம்..!"

"இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே கஜபதியின்முன்னால் நின்றான் சிங்காரம்.

"இந்தக்கடிதத்தை பீமா லஞ்சு ஹோம் முதலாளியிடம் கொடுத்து விட்டு வா!" என்றான் கஜபதி.

"ம்..வந்து....மழை பெய்து கொண்டிருக்கே, கஜா!" என்று முனகினான் சிங்காரம்.

"மழை பெய்துகொண்டிருந்தால் என்ன? புயல்தான் அடிக்கட்டுமே! சொன்னா சொன்ன காரியத்தைச் செய், தெரிஞ்சுதா?" என்று பயமுறுத்தினான் கஜபதி.

பள்ளிக்கூடத்து ஹாஸ்டலில் வசிப்பவர்கள்தான் கஜபதியும் சிங்காரமும். கஜபதி அந்த ஹாஸ்டலிலேயே வயதில் பெரியவன். முரடன் கூட. எல்லா விளையாட்டுக்களுக்கும் அவன்தான் தலைவன். கஜபதியிடம் எல்லாருக்குமே பயம். அவன் விருப்பத்திற்கு மாறாக நடந்தால் தொந்தரவுதான்.

மனசுக்குள் கஜபதியைச் சபித்துக்கொண்டே பீமா லஞ்சுஹோமுக்குக் கிளம்பினான். வழியில் சிங்காரம் பூபதியைச் சந்தித்தான். பூபதி சிங்காரத்தின் நண்பன். இருவரும் ஒரே வகுப்பு. சிங்காரத்துக்கு அடங்கியவன்.

"டேய் பூபதி, இந்தக் கடிதத்தைப் பீமாலஞ்சு ஹோம் முதலாளிகிட்டக் கொண்டு போய்ச் சேர்த்துடணும். ரொம்ப அர்ஜண்ட்" என்றான் சிங்காரம்.

"என்னடாது! இந்த மழையிலே வந்து.." என்று இழுத்தான் பூபதி.

"புயலே வீசினாலும் சரி. இந்தக் கடிதாசியைக் கொண்டு போய் அவன் கையிலே சேர்ப்பித்து விட வேண்டியது உன் பொறுப்பு" என்று கடிதத்தை அவன் கையில் திணித்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தான் சிங்காரம்.

தலைவிதியே என்று ஹாலைக் கடந்து லைப்ரரி வழியாக அவன் வந்தபோது சீனு கையில் குடை

யுடன் இருப்பதைக் கண்டான் பூபதி. அவன் முகம் பளீரென்று பிரகாசமடைந்தது. சீனு ஒரு புத்தகப் புழு. ஆனால் அப்பாவி!

"சீனு, இங்கே வாயேன், ஒரு முக்கியமான விஷயம்!" என்று கூப்பிட்டான் பூபதி. ஆட்டாளுக்கு ஒரு சீட்டாள், சீட்டாளுக்கு ஒரு நொண்டிக் குதிரை கிடைத்து விட்டது.

"இந்தக் கடிதத்தைப் பீமாலஞ்சு ஹோமில் சேர்ப்பித்துவிட வேண்டும். ரொம்ப அவசரமான விஷயம் இதில் அடங்கி இருக்கு!" என்று அவன் கையில் கடிதத்தைத் திணித்தான் பூபதி.

சீனுவுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. அவன் பீமாலஞ்சு ஹோமை அடைந்ததும் மழையும் நின்றுவிட்டது. குடையை மடக்கிக் கொண்டு கடிதத்தை எடுக்கப் பையில் கையை விட்டான். கடிதம் இல்லை. அவனுக்குப் பகீர் என்றது. டிராயர் பையைப் பரபரப்புடன் துழாவினான். கடிதத்தைக் காணோம். அவன் உடல் வியர்த்தது. நெஞ்சு தவித்தது. 'ஒரு வேளை குடையை எடுக்கப் போன போது லைப்ரரி மேஜைமீதே வைத்து விட்டோமோ?' என்ற சந்தேகத்துக்கு இடமளித்தது சிந்தனை.

ஓட்டமும் நடையுமாக லைப்ரரியை நோக்கி வந்துகொண்டிருந்தான் சீனு. இப்போது மழை இல்லை. பூபதியிடம் கடிதம் தொலைந்து விட்ட தென்பதை எப்படிச் சொல்வது என்று நடுங்கிக் கொண்டே நடந்தான். அதே சமயத்தில் கஜபதி சிங்காரத்தை மாடி வராந்தாவில் சந்தித்தான்.

"என்னடா, சிங்காரம்; அதுக்குள்ளே கடிதத்தைக் கொடுத்துட்டு வந்துட்டியா?" என்று கேட்டான்.

"ஆமாம், கடிதம் போய்ச் சேர்ந்திருக்கும். ஆனால், எனக்கு ஷேக்ஸ்பியர்லே டெஸ்ட் இருக்கு. அதனாலே நான் பூபதிகிட்ட கொடுத்தனுப்பினேன்" என்றான் நடுங்கியபடியே சிங்காரம்.

"துரை படிப்பிலே புலி! ஏண்டா, நான் ஒரு காரியம் செய்யச் சொன்னா அதிலே இத்தனை அலட்சியமா?" என்று சொல்லிய படி சிங்காரத்தின் காதைப் பிடித்துக் கசக்கிவிட்டு, அவன் கண்களில் கண்ணீரைக் கண்ட பிறகு பூபதியைத் தேடிக்கொண்டு கிளம்பினான் கஜபதி.

பூபதியிடமிருந்து அவனுக்குக் கிடைத்த பதில் அவனுக்கு இன்னும் ஆத்திரம் உண்டாக்கியது.

சீனு லைப்ரரி மேஜையைச் சுற்றி நூற்றுப் பதினெட்டாவது தடவையாக வளைய வந்து கொண்டிருந்த போதுதான் ராட்சதனைப் போல் கஜபதி அவன்மீது பாய்ந்தான். "என் கடிதத்தைப் பீமாலஞ்சு ஹோம் முதலாளிகிட்டக் கொடுத்தியா?" என்று குலுக்கினான்.

"இல்லை.. இல்லை.. கஜா.. உன் கடிதாசியைப் பத்தி எனக்கு ஒண்ணுமே தெரியாது. பூபதி கொடுத்த கடிதாசியைத்தான் தொலைத்து விட்டுத் தேடிக்கிட்டிருக்கேன்" என்றான்.

"தொலைச்சுட்டியா?" என்று லைப்ரரியே கிடுகிடுக்கும்படி அவன் அலறினான்.

"கஜா..கஜா..க..க..க.."

"இந்த..க..கா ராகத்தை நிறுத்துடா. போய் சிங்காரத்தையும் பூபதியையும் தேடி இழுத்துக்கிட்டு என் ரூமுக்கு வா" என்று கோபாவேசத்துடன் தன் அறைக்குத் திரும்பினான் கஜபதி.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சிங்காரம், சீனு, பூபதி மூவரும் கஜபதியின் அறைக்குள் நுழைந்தார்கள். "கடிதத்தைத் தொலைத்ததற்கு மூன்று பேரும்தான் பொறுப்பு" என்றான் கஜபதி.

"பார்க்கப் போனால்.." என்று கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசினான் சிங்காரம். "உன் கடிதத்தை நாங்கள் எதற்காகக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும்? உனக்கு வேலை செய்யவேண்டும் என்று எதாவது ரூல் இருக்கோ?"

"எனக்கு வேலை செய்ய வேண்டுமென்று எந்த விதியும் கிடையாது. ஆனால் திருடினவர்களுக்குத் தண்டனை விதிக்கச் சட்டம் இருக்கிறதென்று தெரியுமல்லவா?"

"என்ன, திருட்டா? யார் திருடியது? எதைத் திருடினோம்?"

"சொல்கிறேன். பீமா லஞ்சு ஹோமுக்கு நான் பத்து ரூபாய் பாக்கி தரவேண்டும். அதை நாளைக் காலைக்குள் தராவிட்டால், வார்டனிடம் வந்து ரிப்போர்ட் கொடுக்கப் போவதாகக் கடைமுதலாளி எச்சரித்திருந்தார். நான் பணத்துக்கு ஏற்பாடு செய்து இன்றுதான் கிடைத்தது. அந்தக் கவருக்குள் ரூபாய் பத்தும் ஒரு கடிதமும் இருந்தது. நீங்கள் மூவரும் அதை எடுத்துக் குஷியாகச் செலவு செய்யத் திட்டமிட்டு இப்படிக் கடிதமே தொலைந்து விட்டதாக நடிக்கிறீர்கள்" என்று கஜபதி சொன்னதும் அந்த மூன்று அப்பாவிகளும் திகைத்தார்கள்.

"நாளைக் காலை எட்டு மணிக்குள் ரூபாய் பத்து என் கைக்கு வந்து சேரவேண்டும். இல்லாவிட்டால் அப்புறம் என்ன நடக்குமோ, தெரியாது" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டான் கஜபதி.

* * *

சிங்காரம், சீனு, பூபதி மூவரும் பயந்து நடுங்கினார்கள்.

"லைப்ரரியில் சுந்துவை நான் 12 மணிக்குப் பார்த்தேன். அவன் ஒரு சமயம் எடுத்திருக்கலாம்" என்றான் பூபதி.

சுந்துவின் அறைக்கு மூவரும் போனபோது, அவன் இரண்டு கையிலும் பெரிய பையைத் தூக்கி கொண்டு எங்கோ வெளியிலிருந்து வந்துகொண் டிருந்தான்.

"அடேடே..எங்கேப்பா, ஷாப் பிங்கா?" என்று சந்தேகக் குரலுடன் கேட்டான் சிங்காரம். சுந்துவிடம் எப்போதுமே காலணாக் காசு இருக்காது. ஏழைப் பையன். ஆனால் பிறர் பணத்தில் சுகமாக வாழும் திறமை உண்டு அவனிடம்.

"என்ன விசேஷம், எங்கே மூணு பேரும் என்னைத் தேடி வந்திருக்கீங்க?" என்றான் சுந்து.

"சும்மாத்தான். அந்தப் பையிலே என்னப்பா?" என்றான். சிங்காரம்.

"மண்ணாங்கட்டி" என்றான் சுந்து அலுப்புடன். ஆனால் சிங்காரம் அவன் பதிலுக்குக் காத்திராமல் அந்தப் பையைச் சோதனை போட்டான். உயர்தரமான பிஸ்கோத்து, கேக், பெப்பர்மிண்ட், பழம் எல்லாம் இருந்தன.

"சுந்து, காலையிலே இட்லி வாங்கித் திங்க என்கிட்ட ரெண்டணா கடன் வாங்கினயே. இதெல்லாம் வாங்க உன் கிட்டப் பணமேது? கணபதியின் கடிதத்தை நீதானே திருடியிருக்கிறாய்?" என்று கேட்டான் சிங்காரம்.

சுந்துவுக்கு இப்படி கேட்டது அவமானமாக இருந்தது.

"மடத்தனமாக எதாவது பேசாதீர்கள்" என்று முகம் சிவக்கச் சொன்னான் சுந்து.

"சுந்து, மரியாதையா உண்மையைச் சொல்லிவிடு. காலம்பர 'பாப்பராக' இருந்த உன்னிடம் இத்தனை சாமான்களையும் வாங்கப் பணமேது?" என்று அவன் கையைப் பற்றிக்கொண்டு சிங்காரம் கேட்டான்.

"அதை உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியது அநாவசியம்!"

"ரொம்ப சரி..இந்தப் பணத்தையும் சாமான்களையும் நாங்கள் பறிமுதல் செய்துகொண்டு போகிறோம். நீ ஏன் என்று கேட்பது அநாவசியம்" என்று சீனுவுக்கும் பூபதிக்கும் ஜாடை காட்ட



இருவரும் இரண்டு பைகளையும் தூக்கிக்கொண்டு வெளியேறினர். சுந்து நேரே வார்டனின் அறையை நோக்கிப் போனான்.

சிங்காரத்தின் அறையில் மூவரும் கூடிப் பையிலுள்ள சாமான்களுக்குப் பட்டியல் தயாரித்துக்கொண் டிருந்தபோது

ஹாஸ்டல் வார்டன் கதவைப் படாரென்று திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். வார்டனைக் கண்டதும் மூவரும் வெல வெலத்துப் போய்விட்டார்கள்.

"என்னப்பா, நான் குறித்துக் கொடுத்தனுப்பிய சாமான்கள் எல்லாம் சரியாக வாங்கி வந்திருக்கிறானா சுந்து என்று சோதிக்கிறீர்களா?" என்றார் வார்டன் ஏகத்தாளமாக.



"உங்க சாமான்களா இவைகள்?" என்றான் சிங்காரம் அதிர்ச்சியுடன்.

"அப்படித்தான் நினைக்கிறேன்! அப்படியே அந்தப் பைகளுடன் மூவரும் என் ரூமுக்கு வாருங்கள்" என்று முன்னால் நடந்தார் வார்டன்.

வார்டனின் அறையில் சுந்துவிடம் அவர்கள் முறை தவறி நடந்துகொண்டதற்காகத் தகுந்த மரியாதையும் எச்சரிக்கையும் பெற்றுக் கொண்டார்கள்.

வெளியில் வந்ததும் திடீரென்று, "ஏய், அங்கே அழகிரியைப் பார்த்ததாக ஞாபகம் வருதடா" என்றான் சீனு.

"அழகிரியைப் பார்த்தியா? அப்போ கண்டிப்பாக அவன்தான் எடுத்திருப்பான்!" என்றான் சிங்காரம் உடனே.

"சிங்காரம், யோசனை இல்லாமல் அசட்டுத்தனமான முடிவுக்கு வராதே. அழகிரி சுந்து இல்லே! சுந்துவைச் சந்தேகப்பட்டே நம்ப படாத பாடுபட்டுட்டோம்" என்றான் பூபதி.

கஜபதிக்கு அடுத்தபடியாக விளங்குபவன் அழகிரி. ஆகவேதான் பூபதி பயப்பட்டான். சிங்காரம் மெதுவாக தைரியத்தை வரவழைத்துக்கொண்டு தயங்கித் தயங்கி அழகிரியின் அறைக் கதவைப் போய்த் தட்டினான்.

"யார் அது? உள்ளே வாங்க" என்று குரல் கொடுத்தான் அழகிரி.

"என்னடா சிங்காரம்..என்ன சமாசாரம்?"

"ஒண்ணுமில்லே..கஜபதி ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்து ஒருவருக்குச் சேர்ப்பிக்கச் சொன்

ஞன். அதைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமான்னு கேட்கத் தான் வந்தேன்.''

''எனக்கா? டேய்!''

''இல்லே, அந்தக் கவருக்குள்ளே ஒரு பத்து ரூபாய் நோட்டு இருந்தது.''

''ஓஹோ! பத்து ரூபாய் நோட்டு இருந்த அந்தக் கவரை நான் திருடிக்கொண்டு வந்துவிட்டதாகத் தானே நீ நினைக்கிறே, இல்லே? ஆமா, நான்தான் அந்தக் கவரை எடுத்தேன்''....என்று சொல்லிச் சிங்காரத்தின் பிடரியில் கையைக் கொடுத்து வெளியில் தள்ளினன் அழகிரி.

வெளியில் வந்து விழுந்த சிங்காரம் அங்கே தயாராகக் காத்துக் கொண்டிருந்த பூபதியிடமும் சீனுவிடமும், ''அழகிரிதான் அந்தக் கடிதத்தை எடுத்தானும். அவனே அதை ஒப்புக்கொண்டு விட்டான். இப்போது நாம் என்ன செய்வது?'' என்ருன் கலவரத்துடன்.

''அவன் வெளியில் போகும் வரை காத்திருந்து, அவன் அறைக்குள் புகுந்து சோதனை போட வேண்டியதுதான்''என்ருன் பூபதி.

அழகிரி கீழே பாத் ரூமுக்குப் போன சமயம் மூவரும் கிளம்பினர்கள். சீனு வெளியில் காவல் வைக்கப்பட்டான். சிங்காரமும் பூபதியும் அறைக்குள் நுழைந்தார்கள்.

''மேஜை டிராயரைத் திறந்து பாருடா'' என்ருன் பூபதி. சிங்காரம் மேல் டிராயரைத் திறந்தான். அங்கு ஒரு பத்து ரூபாய் நோட்டு இருந்தது.

''டேய்..இருக்கு. இதோ பத்து ரூபாய் நோட்டு!''

அதை எடுத்துக்கொண்டு மின்னல் வேகத்தில் இருவரும் அறையை விட்டு வெளியேறி மறைந்தார்கள்.

''இந்தாப்பா, கஜபதி! உன் பணம்'' என்று பத்து ரூபாய் நோட்டைப் பறக்க விட்டான் சிங்காரம். பணத்தைக் கண்ட கஜபதி திகைப்படைந்தவனுக, ''ஓ! கண்டுபிடித்து விட்டாயா? ம்.. கடிதம் எங்கே..?'' என்ருன்.

''இந்தா, கஜபதி. சும்மா விரட்டாதே. உன் பணத்தைக் கொடுத்தாகி விட்டது. இனி வீண் விவகாரம் எதற்கு?'' என்று வேகமாகத் தன் அறைக்கு வந்தான் சிங்காரம். அப்போது கதவை முட்டித் திறந்துகொண்டு அழகிரி உள்ளே நுழைந்தான். அவன் முகம் சிவந்திருந்தது.

''டேய் திருட்டுப் பயங்களா? சீனு எங்கிட்ட உண்மையைக் கக்கிட்டான். மரியாதையா என் பணத்தைக் கொடுத்துடு.''

அழகிரி பேசியதும் வார்டன் உள்ளே நுழைந்தார்.

''என்னப்பா, சிங்காரம்! மறுபடியும் இதென்ன கலாட்டா? ஹாஸ்டல்லே இதுமாதிரி கலாட்டா செய்பவர்களை எல்லாம் அநுமதிக்க மாட்டோம், தெரிந்ததா? சரி ரெண்டுபேரும் என் ரூமுக்கு வாங்க.''

அதேசமயம் சீனு மூச்சுவாங்கக் கையில் குடையுடன் உள்ளே ஓடி வந்தான். மற்ருெரு கையில் ஒரு கவர் இருந்தது.

''நான் கண்டு பிடித்து விட்டேன். என் குடைக்குள்ளேயே இருந்தது. கவர் என் சட்டைப்பைக்குள் கொள்ளாமல் பெரிதாக இருந்தது. அதற்காக அதைக் குடைக் கம்பிகளுக்கு இடையே செருகிக்கொண்டு

போயிருக்கிறேன். கடைக்குப் போய், குடையை மடக்கியபோது கவரை எடுத்துக் கொள்ள மறந்து போய் மடக்கி விட்டேன். இப்போது நினைவுக்கு வந்தது. போய்ப் பார்த்தேன். அப்படியே இருக்கிறது'' என்று அசடு வழியச் சொன்னான் சீனு.

சிங்காரம், சீனு, பூபதி மூவரும் எல்லா விவரத்தையும் வார்டனிடம் விளக்கினார்கள். கதை முழுவதையும் கேட்ட வார்டன் சீனுவிடமிருந்த கஜபதியின் கடிதத்தை வாங்கிப் படித்தார்.

'பீமா, லஞ்சுஹோம்,

அன்புள்ள ஐயா, உங்களுக்கு வாக்களித்தபடி உங்கள் பாக்கியைத் தீர்க்க முடியாததற்கு வருந்துகிறேன். இன்னும் இரண்டு நாளில் உங்கள் கடனை அடைத்து விடுகிறேன். ஹெட் மாஸ்டரிடமோ, வார்டனிடமோ வந்து புகார் செய்ய வேண்டாம்.

கஜபதி.'

இப்போது வார்டனுக்குக் கஜபதியின் புளுகு புரிந்து விட்டது.

அழகிரியின் பத்துரூபாய் அவனுக்குத் திரும்ப வாங்கிக் கொடுக்கப்பட்டது. கஜபதியின் பேரில் இதுபோல் கடன் புகார்கள் ஏராளமாக இருந்ததாலும், அவன் சிறுவர்களைப் பயமுறுத்தி ஏமாற்றிக் கொண்டு இருந்ததற்காகவும் அவனை ஹாஸ்டலை விட்டே விலக்கினார்கள்.

தலை விதி

ஒரு பெரிய குதிரைப் பண்ணையில் ஆயிரக் கணக்கில் குதிரைகள் இருந்தன. அதில் ஒரு வயதான குதிரை மற்றக் குதிரைகளிடம், "நம் உழைப்பைக்கொண்டு மனிதர்கள் உல்லாசமாக வாழ்கிறார்கள். ஆகையால் நாம் எல்லாரும் ஒன்றுகூடி அவர்களைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்'' என்று சொல்லியது.

எல்லாக் குதிரைகளும் இதை ஆமோதித்தன. உடனே ஒரு பெரிய புல்வெளியில் எல்லாக் குதிரைகளும் ஒன்று சேர்ந்தன. பிரசங்கம் ஆரம்பமாயிற்று. ஒவ்வொரு குதிரையும் மேடைமீது ஏறி, தனக்குத் தோன்றிய யோசனைகளைச் சொல்லின.

கடைசியில் ஒரு முரட்டு இளங் குதிரை கனைத்துக்கொண்டே மேடைமீது ஏறிக் கோடை இடியைப்போல் கர்ஜித்தது:

"நம் வர்க்கத்தினர் எத்தனை நூற்றாண்டுகளாக அடிமையாக இருந்திருக்கிறார்கள்! அதை நினைத்துப் பார்த்தால் உள்ளம் குமுறுகிறது. சகோதரர்களே! நம்முடைய இளமையும், வலிமையும், வனப்பும் இந்த அற்ப மானிடர்களிடம் பலியாகிறதே!...''

கொஞ்சம் பேச்சை நிறுத்தியது அந்த வாலிபக் குதிரை. அந்தச் சமயத்தில் இதைக் கேட்டுக்கொண்டே வந்த ஒரு பெட்டைக் கோழி, "அன்பனே, நீ கூறியது அவ்வளவும் வாஸ்தவம்தான்! வேட்டையாடித் திரியும் ராஜாளியை அனலில் இட்டு மனிதர்கள் பொசுக்குவதைப் பார்த்திருக்கமாட்டாய். அவர்களுக்குப் போஷணைப் பொருளைத் தரும் எங்களை ஆயிரக்கணக்கில் தினம் நெருப்பிலிட்டுப் புசிக்கிறார்கள். இதுதான் உலகத்தின் விநோதம்! நம் தலைவிதி அது!'' என்றது அந்தக் கோழி.

—நாடோடிக் கதை

"பள்ளிக்கூடம் முடிகிறது!"

இது ஓர் உற்சாகமான விளையாட்டு. விளையாடுவதற்கு எழெட்டுப் பேர்கள் வேண்டும்.

ஒரு விசாலமான அறையில் எல்லாரும் வட்டமாக, அவரவர்கள் இடங்களில் ஏதாவது அடையாளமிட்டுக் கொண்டு உட்கார்ந்து கொள்ளுங்கள்.

ஒவ்வொரு சிறுவனுக்கும் பேனா, உபாத்தியாயர், விளையாட்டு மைதானம் - என்று பேர் கொடுத்து விடுங்கள்.

நடுவில் நிற்கும் சிறுவன் ஏதாவது ஒரு கதை சொல்ல வேண்டும். அந்தக் கதையும் பள்ளிக்கூடங்களில் வழங்கப்படும் பொருள்களைப் பற்றியதாக இருக்கவேண்டும். உதாரணமாக, "நான் ஒரு நாள் காலையில் பள்ளிக்கூடத்திற்குப் பையையும், **டிபன் பாக்ஸையும்** எடுத்துக் கொண்டு கிளம்பினேன். பாதி வழியில்தான் **வீட்டுக் கணக்குப்** போடாதது நினைவிற்கு வந்தது. **பள்ளிக்கூடத்திற்குப்** போய்ச் செய்து கொள்ளலாம் என்று **பள்ளிக்கூடத்தை** நோக்கி வேகமாய் நடந்தேன்.."

இவ்வாறு, மனத்தில் தோன்றுவதைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் உதாரணத்தில் அடியில் கோடிடப்பட்டுள்ள பெயர்களையுடைய சிறுவர்களும் இருக்கலாமல்லவா? அவர்கள் தம்பெயர் எப்போது கதை சொல்பவன் வாயில் வெளிப்படுகிறதோ, உடனே, எழுந்து ஒரு முறை தன்னைத் தானே சுற்றிக்கொண்டு இடத்தில் உட்கார்ந்துகொள்ளவேண்டும்.

"**பள்ளிக்கூடத்திற்குப்** போய்ச் செய்து கொள்ளலாம் என்று **பள்ளிக்கூடத்தை** நோக்கி.."

இவ்விடத்தில் பள்ளிக்கூடம் என்று பெயரிடப்பட்டிருப்பவன் ஒரு முறை சுற்றி உட்காரு முன்பு மறுமுறை தன் பெயர் அடிபடுவதால் இன்னொரு முறையும் உடனே எழுந்து சுற்றி அமரவேண்டும்.

கதை சொல்பவன், 'போதும்' என்று நினைக்கும்போது, "பள்ளிக்கூடம் முடிகிறது" என்று கூற வேண்டும். உடனே சுற்றி அமர்ந்திருக்கும் சிறுவர்கள் தத்தம் இடங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். அந்தச் சமயம் நடுவில் இருந்தவனும் பாய்ந்து சென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்வான். இடமின்றி மிஞ்சுபவனே மறுபடியும் கதைகூறத் தொடங்க வேண்டும்.

—பி. என். குமாரி.

சினிமாவிலே

எஸ். ரங்கநாயகி

ராமு, பாலு, விட்டல்—சகோதரர்கள்.
மற்றும் அவர்கள் பாட்டி, அப்பா, அம்மா, அக்கா, அத்திம்பேர்.

1

ராமு: கண் மூடித் திறப்பதற்குள் லீவு முடிஞ்சுப் போச்சுடா. மார்க் என்ன வருமோ, பயமாக இருக்கிறது.

பாலு: அட போடா! கால் பரீக்ஷையில் கால் மார்க் என்றால் அரைப் பரீக்ஷையில் அரை மார்க் வந்துவிடப்போகிறது. அதுக்கு என்னடா பயம்?

விட்டல்: போங்கடா, சும்மா சும்மா ஸ்கூலைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறீர்களே, வேறு ஏதாவது பேசலாமே.

பா: போடா, இந்த வீட்டிலே வேறு எதைப்பற்றித்தான் பேச முடியும்? சோமு வீட்டைப் போலவா! அவர்கள் வீட்டைப் பார்! சினிமா, டிராமா ஒன்று தவறுவதில்லை. எல்லாவற்றிற்கும் போய் வந்து விடுகிறார்கள்.

ரா: ஆமாண்டா, கிருபா டாக்கீஸில் 'ஸ்ரீ ஆண்டாள்' படம் மூன்று மாதமாக அமர்க்களமாக ஓடுகிறது. அதைப்பற்றிப் புகழாத பேப்பர் இல்லை. ஆனால் நம்வீட்டில் அதைப்பற்றிப் பேச்சே இல்லை.

விட்: இந்த 'ஆண்டாளு'க்கு எப்படியாவது போக வேணும்டா.

பா: அட போடா, எண்டா இந்த வீண் மனக்கோட்டை!

ரா: மெதுவாக அப்பாவைக் காக்காய் பிடித்து விடணும்.

விட்: அதுதான் முடியாது. சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காது. அப்பா தந்தாலும் அக்கா தடுத்து விடுவாள்.

பா: ஆமாம். மூன்று பிள்ளைகளுக்கு நடுவில் இவள் ஒரு பெண்ணாகப் பிறந்துவிட்டு என்ன பாடு படுத்துகிறாள். நீங்களெல்லோரும் பெண்ணாய்ப் பிறந்து நான் மட்டும் பிள்ளையாகப் பிறந்திருந்தால் எவ்வளவு செல்லமாக இருப்பேன்!

ரா: ஏய், ஜாக்கிரதை!

விட்: ஏய், சும்மா இருங்கள். நாளைத் தினம் அப்பாவை ஒரு தடவை கேட்டுப் பார்த்துவிடலாம்.

2

மறுநாள்.

ரா: அப்பா!

அப்பா: எண்டா?

பா: வந்து..வந்து..

அக்கா: வந்து என்ன, போய் என்னடா? சமாசாரத்தைச் சொல்லிவிடேன். அப்பப்பா, இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கே தைரியம் கிடையாது.

பாட்டி: உன்னையும் உன் அம்மாவையும்போல் ஒரு பெண் இருந்துவிட்டால் ஆண்பிள்ளைகளுக்கு எப்படித் தைரியம் வரும்?

ரா: சபாஷ் பாட்டி, வெல் ஸெட் (well said)!

அம்மா: வெல் என்ன, ஸெட் என்ன? பாட்டியோடு சேர்ந்து அம்மாவைத் திட்டுவதென்றால் உங்களுக்குஎன்னசந்தோஷமோ? என்னைத் திட்டாமல் உங்கள் பாட்டிக்குப் பொழுது போகாது.

பாட்டி: பின்னே என்னடி? நானும் ஐந்து வருஷமாக அடிச்சுக்கிறேன். இந்த யாத்திரை வண்டி போறதே, அதிலே எனக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொடு என்று. வாங்கிக் கொடுத்தால் அப்படியே கங்கையைப் பார்க்கப் போவேனேல்லியோ?

பாலு: அச்சச்சோ, அப்படியே கங்கையிலே நீ உட்கார்ந்துட்டா எங்களுக்கு யார் கங்கா ஜலம் கொடுப்பா?

அப்: அதைப் பாட்டிதான் கொண்டு வரவேண்டுமா? உங்க அம்மா அக்கா வற்றுக் கண்ணீரைவிட அது உயர்ந்ததில்லை.

அக்: என் என்னை இப்படிக் கரிச்சுக் கொட்டணும்? நான் வீட்டில் இருப்பது பிடிக்கவில்லை என்றால் என் புக்ககத்திற்குப் போய்விடுகிறேன். கல்யாணம் ஆன பெண்களுக்குப் பிறந்த வீட்டில் இடமில்லை என்பது தெரிந்த விஷயம்தானே.

ரா: தேவலையே. அக்கா சரியான அஸ்திரத்தைத்தான் போடுகிறாள். அவள் அகத்துக்காரர், "நீ இல்லாவிடில் என்னால் இருக்கவே முடியவில்லை" என்று முதலைக் கண்ணீர் விட்டு எழுதியிருக்கிறார் போலிருக்கு!

அம்: என்டா உங்க மூன்று பேர்களுக்கு நடுவில் அவள் ஒருத்தி இருப்பது உங்கள் கண்ணை உறுத்துகிறதா? உங்களுக்குமேல் உங்கள் அப்பா படுத்துகிறார். உங்கள் பாட்டியைக் காசி யாத்திரை அனுப்புவதை நாங்களா வேண்டாம் என்றோம்? வருஷம் நாலாச்சு. தீபாவளிக்கு ஒரு புடவை வாங்கணும் என்றேன். அதுக்கே பணமில்லை. காசி யாத்திரைக்குப் பணம் ஏது?

அக்: அதுமட்டுமில்லை. உங்க மாப்பிள்ளை விவாகமானதிலிருந்து ஒரு கடிகாரம் வேண்டும் என்கிறார். அது வாங்கிப்போடவே நம் கையில் பணமில்லை. தேமேனு உங்கள் மாப்பிள்ளை அதிகம் நச்சரிப்பதில்லை!

விட்: அதுக்கென்ன, மாப்பிள்ளை காதில் கடுக்கன், கழுத்தில் சங்கிலி, கையில் காப்பு போட்டுக்கொண்டால் அதையும் வாங்கிவிட்டால் ஆச்சு.

ரா: அது கிடக்கட்டும். தினமும் பீச்சிற்குச் செல்ல ஒரு மோட்டாரும் குடியிருக்க வீடும் வாங்கி விட்டால் ஆச்சு.

பா: அதோடு ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்க ரேடியோவும் வாங்கி விட்டால் ஆச்சு.

அக்: (அழுது கொண்டே) அம்மா, இதோ பார். இப்பவே ரெயிலில் என்னை ஏற்றிவிடு. நான் அவரிடம் போய்விடுகிறேன். என்னால் இந்த ஏச்சுப் பேச்சுகளைப் பொறுக்க முடியாது.

ரா: ரொம்ப ரைட், அக்கா! இப்பொழுது போய்விடு. இரண்டு மாதம் கழித்து, புக்ககத்து ஏச்சுப் பேச்சுகளைச் சகிக்காமல் பிறந்த வீடு வரலாம். மறுபடியும் இங்கிருந்து போகலாம். பெண்ணாகப் பிறந்தால் தேவலை. புட்பால் மாதிரி ஏச்சுப் பேச்சுகளை மறக்கப்

பிறந்த வீடும் புகுந்த வீடுமாகப் போகலாம். ஆண்களைப்போலவா?

அம்: ராமு, இந்த மாதிரி குழந்தையைத் திட்டினுல் நன்ருக அடித்து விடுவேன்.

பா: சரிதான் பதினேழு வயதுக் குழந்தைக்குப் பரிந்து பன்னிரண்டு வயதுத் தடியனை அடித்து விடு. திருப்தியாகிவிடும். ராமு, விட்டல்! வாங்கடா போகலாம். நாம் வந்த காரியத்தைச் சொல்லக் கூட முடியவில்லை.

அப்: என்னடா! என்ன வேண்டும்?

ரா: அதை எப்படிச் சொல்வது? இங்கே பொருளாதார நிலையைப் பார்த்தால் வாய் திறக்க முடியாது போலிருக்கே! பட்ஜெட் விவாதத்தில் பாட்டி காசி யாத்திரை, அம்மா பட்டுப்புடவை மாப்பிள்ளை ரிஸ்ட்வாட்சு எல்லாம் துண்டு விழும்போது நாங்கள் வாய் திறக்க வழியில்லையே.

பா: அதனுல் பாதகமில்லையடா. அந்தத் துண்டு விழும் கட்டத்தில் நம்முடையதையும் சேர்த்து விடட்டும். சிறிய தொகைதானே? ஒன்றுமில்லையப்பா. உங்கள் குழந்தைகள் சினிமா பார்த்துக் களிக்கக் கொஞ்சம் பணம் ஒதுக்க வேண்டும்.

அப்: சரி ஒழியுங்கள். சாயங்காலம் பணம் தருகிறேன்.

அக்: நன்ருயிருக்கு. இம்மாதிரி இடம் கொடுத்துத்தான் அவர்கள் கெட்டுவிட்டார்கள்.

ரா: உன்னையும் அழைத்துப் போகிறேம், பயப்படாதே.

அக்: ஐயே, சினிமா பார்க்கல்லையேன்னுதான் வருத்தமாக்கும். உங்களுக்குக் கொடுக்கும் பணத்தை வைத்திருந்தால்..

பா: மாப்பிள்ளைக்கு மோதிரம் பண்ணலாம் என்கிருயோ? இரண்டரை ரூபாய்க்கு எவன் மோதிரம் தருவான்?

அக்: சிறு துளி பெருவெள்

ளம்னு படிச்சதெல்லாம் எட்டுச் சுரைக்காயோ?

அம்: அது கிடக்கட்டும். அந்தப் பணம் தயிர்க்காரிக்கு ஆகும். இல்லாவிடில் எவர்ஸில்வர் கிண்ணம் வாங்கலாம்.

பாட்: அந்தப் பணத்திலே காசிக்குப்போனால் காசிச் சொம்பு வாங்கலாம்.

ரா: பாட்டி, சும்மா இரு. நான் காசிக்கு அழைத்துப் போய், சொம்பு வாங்கித் தரேன். சினிமா போவதைத் தடுக்காதே.

பாட்: ஆமாண்டாப்பா; அந்த நாளிலே உங்க தாத்தா அழைத்துப் போகிறேன் என்றார். பிரகு உன் அப்பா சொன்னான். இனிமேல் சொல்வதற்கு நீங்கதான் பாக்கி.

விட்: நிஜமாக நாங்கள் மூவரும் அழைத்துச் சென்றுவிடுவோம்.

பாட்: சரி, அப்படியானால் இன்று சினிமாவுக்கு உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள், பார்க்கலாம்.

அக்: பாட்டி, போனால் நானும் வருகிறேன்.

அம்: அப்பன்னா, நான் மட்டும் வீட்டில் இருப்பதா? நானும் வருகிறேன்.

அப்: குழந்தைகளே, உங்கள் எண்ணம் ஈடேறாதது பற்றி வருந்துகிறேன். இந்த வீட்டு மாகாணத்தில் நான் ஒரு கவர்னரே. அதிகாரம் முழுவதும் சட்டசபை அங்கத்தினர்கள் கைகளில் இருக்கிறது. அங்கத்தினர்கள் ஒரு மனப்படவேண்டும். ஒரு சில சமயம் அவர்கள் எதிர்க்கட்சியினராகவும் ஆகிவிடுவதால் நிலைமை கஷ்டமாகிவிடுகிறது. ஆகையால் நீங்கள் காத்திருந்து பெரியவர்களாகி நிர்வாகப் பொறுப்பு உங்கள் கைகளில் விழுந்ததும் எவ்விதம் வேண்டுமோ செலவு செய்து கொள்ளலாம். (போய்விடுகிறார்.)

3

தீபாவளிக்கு இரண்டு நாட்கள் முன்பு.

ரா: டேய், நம்ப அத்திம்பேர் தீபாவளிக்கு வருகிறாராம்!

விட்: பூ! இவ்வளவுதானா? வந்தால் அக்காவுக்குப் புடவை கிடைக்கப் போகிறது. நமக்கென்னடா? பட்டாசு வாங்கி வருவாரா, ஷர்ட் துணி வாங்கி வரப்போகிறாரா அல்லது வந்தால் எங்கேயாவது இரண்டு இடங்களுக்கு அழைத்துப் போகப் போகிறாரா? அக்காவை அழைத்துக்கொண்டு ஜம்மென ஊர் சுற்றப் போகிறார்.

ரா: இந்தச் சமயத்தில் அக்காவுக்குத்தெரியாமல் தீபாவளியன்று சினிமா பார்த்து விடணும். அத்திம்பேர் வந்திருக்கும் கொண்டாட்டத்தில் அக்கா நம் பக்கமே தலைகாட்ட மாட்டாள். போய் விட்டு வந்து அவளை அழ வைக்க வேண்டும்.

விட்: சரிதான்; பெரிய மனக்கோட்டை கட்டாதே. அத்திம்பேரும் வந்திருக்கும் சமயத்தில் ஒரு தம்பிடி எதிர்பார்ப்பது நடக்காத காரியம்.

பா: நான் ஒன்று சொல்லுகிறேன். இந்த வருஷம் பட்டாசுக்கு ஆளுக்கு ஒரு ரூபாய் வாங்கிவிடலாம். அந்தப் பணத்தில் சினிமாவுக்குப் போய் விடலாம்.

விட்: பிரகு பட்டாசுக்கு என்ன செய்வது?

ரா: அட ஒரு வருஷம் பட்டாஸ் விடாவிட்டால் முழுகிப் போய்விடாது. காந்திதான் பட்டாசுக்கு வீண் செலவு செய்யாதீர்கள் என்று சொல்லுவாரே?

விட்: சரிதான் பட்டாஸ் வீண் செலவு, சினிமா நல்ல செலவு. இல்லையா?

ரா: அட, சும்மா வார்த்தைக்குச் சொன்னால் அமர்க்களப் படுத்துகிறாயே!

விட்: சரி அப்பாவைப் போய்ப் பணம் கேக்கலாம். வாங்க.

(போகிறார்கள்)

4

தீபாவளி. சினிமாவில்.

பா: இது என்னடா, வெளியே ஜனங்களே இல்லை!

பா: மணி ஆகவில்லையேடா. இரண்டரை மணி ஆட்டத்திற்குப் பதினொரு மணிக்கே கும்பலா?

விட: அச்சோ, இதோ பாருங்கோ இந்தப் போர்டை. இன்று எல்லாக் காட்சிகளுக்கும் எல்லா வகுப்பிற்கும் டிக்கட்டுகள் விற்றுவிட்டன என்று போட்டிருக்கே. சரியாகப் போச்சு. வாங்கோ. வந்த மச்சான் திரும்பிப் போனான் என்று ஒத்தை ரூபாயோடே போகலாம்.

ரா: ஒரு விதத்திலும் அதிர்ஷ்டம் இல்லையடா!

விட: அக்காவிற்கு நாமம்போட நினைத்தோம். நமக்குப் போட்டு விட்டான் சினிமாக்காரன்.

ரா: நல்ல வேளை, நாம் வந்தது அக்காவுக்குத் தெரியாது.

தாயார்: சீதா, ஏன் நாய்க்கு அழகு காட்டறே?

சீதா: இல்லேம்மா, அதுதான் முதல்லே எனக்கு அழகு காட்டித்து!

—பிரேமா, திருச்சி.

அன்று மாலை.

(ராமு, பாலு, விட்டல் வாசலில் உட்கார்ந்திருக்கின்றனர். அவர்கள் அக்காவும், அத்திம்பேரும் வெளியே போய்விட்டு டாக்ஸியில்வந்திறங்குகின்றனர்)

அக்: குழந்தைகளே, சினிமா வாசலில் தவம் கிடந்தீர்களே? டிக்கட் கிடைத்ததா?

(மூவரும் திடுக்கிடுகின்றனர்)

பா: நாங்கள் சினிமாவிற்குப் போகவில்லையே.

அக்: சும்மா கதை அளக்காதே. நாங்கள் டவுனுக்குப் போகும் பொழுது உங்களைச் சினிமா வாசலில் பார்த்தோமே.

பா: அதைச் சொல்கிறாயா? சினிமாவிற்குப் போகலாமென்றுதான் போனோம். ஆனால் அந்தப் படம் நன்றாகவே இல்லையாம். அதனால் டிக்கெட் வாங்காமல் வந்துவிட்டோம்.

விட்டல்: மேலும் அப்பாவைத் தொந்தரவு செய்யக்கூடாதென்று நோட்புக் வாங்கத் தீர்மானித்து வந்துவிட்டோம்.

அத்திம்பேர்: சரியாய்ப் போச்சு, அவ்வளவு சிக்கனம் வந்துவிட்டதா உங்களுக்கு? அப்படியானால் எங்களுக்குச் சினிமாவில் நாளைக்கு ரிசர்வ் செய்த டிக்கட்டுகளைத் திருப்பி விடட்டுமா? பாவம், குழந்தைகள் டிக்கட் கிடைக்காமல் நிற்கிறீர்களே என்று நாளைக்கு உங்க மூன்று பேர்களுக்கும் ரிசர்வ் செய்துவிட்டுவந்தேன்.

விட்: அப்படியானால் நீங்களும் அக்காவும் பார்த்தாச்சா?

அத்: நேராகச் சினிமாவிலிருந்துதான் வருகிறோம். படம் பேஷாக இருந்தது. உங்களுக்கு இஷ்டமில்லாவிடில் டிக்கட்டுகளைத் திருப்பி விடுகிறேன்.

பா: வெளியே ஒட்டியிருந்த படங்களைப் பார்த்ததும் படம் நன்றாகத்தான் இருக்கும் என்று தீர்மானித்துவிட்டோம்.

விட்: மேலும் இவ்வருஷத்திற்கு வேண்டிய நோட்புக் வாங்கி விட்டதால் இனி அப்பாவைத் தொந்தரவு செய்யவும் வேண்டாம்.

அக்கா: போடா, போக்கிரிகளா? குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத சமாசாரமா?

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(N) 217. நாராயணன், K. S. V., சென்னை-4. 218. நடராஜன், K. P., சென்னை - 14. 219. நல்லக்கண்ணு, S., குத்தாலம். 220. நாராயணன், A., விருதுநகர். 221. நந்தகோபால், K., தஞ்சாவூர். 222. நடராஜன், R., புதுக்கோட்டை. 223. நாகப்பன், M. M., ஒட்டத்துறை. 224. நாகராஜன், K. A., சென்னை-20. 225. நாகராஜன், தியாகராஜன், S., தஞ்சாவூர். 226. நடராஜன், S. கண்டி. 227. நம்பி நாராயணன், பணகுடி. 228. நாராயணன், S., அருப்புக்கோட்டை. 229. நாமகிரி, V. S., நாமக்கல். 230. நாராயணி, S., தஞ்சாவூர்.

(P) 281. பிரேமா, கலாவதி, M., ஆம்பூர். 282. பழனியப்பன், நாராயணன், உடுமலைப்பேட்டை. 283. புஷ்பவதி, R., சென்னை-12. 284. பிரேமா, G., திருவாரூர். 285. பத்பநாபன், G., ஈரோடு. 286. பரமசிவன், P. S., புகளூர். 287. பார்த்தசாரதி, V., புதுடில்லி. 288. பார்த்தசாரதி, N., சென்னை-4. 289. பழனிவேலு, S., திருக்காட்டுப்பள்ளி. 290. பழனிவேலு, P., முசிறி. 291. பரமசிவன், S., சென்னை-4. 292. பார்த்தசாரதி, V., சென்னை-5. 293. பார்த்தசாரதி, N. S., சென்னை-1. 294. பிரேமா, P. V., சேலம். 295. பார்த்தசாரதி, R. சென்னை-21. 296. பாண்டுரங்கம், G., ஆவடி. 297. பார்வதி, T. R., தென்காசி. 298. பத்மினி, A. D., சென்னை-2. 299. பத்மாசங்கர், S., நாகர்கோயில். 300. பால்ராஜன், லக்ஷ்மணன், P., சிவகாசி. 301. பழநியாண்டவன், P. M., மதுரை. 302. பரமசிவன், P. S., சென்னை-5. 303. பழனிசாமி, S., நெகமம். 304. பரிமளா, T. N., காட்டுப்பட்டி. 305. பத்மா, S., சென்னை-5. 306. பத்மா, M. V., சென்னை-17. 307. பொன்னுசாமி, N., ஹாகவெட், சிலோன். 308. புருஷோத்தமன், M. S., சேலம். 309. பழனியப்பன், M., மணல்மேடு. 310. பரூக், K. M., ஸ்ரீ வைகுண்டம். 311. பழனிசாமி, S. K., (விலாசம் எழுத

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

டிச. 1-'53 கூபன் நெ:

வில்லை). 312. பூர்ணம், V., ஒரக்காடுபேட்டை. 313. புருஷோத்தமன், R., சென்னை-1. 314. பட்டாபிராமன், V., சென்னை-2. 315. பாண்டுரெங்கன், P., சென்னை-4. 316. பொன்னம்மாள், N., ராமவர்மபுரம். 317. பக்கிரிசாமி, S., சென்னை-1. 318. பரந்தாமன், S., ரத்தினபுரா, சிலோன். 319. பழனிவேலு, K., ஒதிக்காடு. 320. பழனியப்பன், V. M., வாணக்காரன் பாளையம். 321. பெரியப்ப நாயகம், நல்லூர், யாழ்ப்பாணம். 322. மீரான், S. A. M., கீழக்கரை. 323. பால்சன், D., விண்டுலா, சிலோன். 324. பூங்காவனம், B., சென்னை-4. 325. பிரபாகரன், V., சென்னை-14. 326. பிரேமா, K. V., திருவானைக்காவல். 327. புலேந்திரன், U., கெள்ளி, சிலோன். 328. பத்மநாபன், T, K., திருவனந்தபுரம். 329. பத்மாவதி, லலிதா, அலமேலு, சரோஜா, S., சென்னை-4. 330. பரமசிவன், K., பழனி. 331. பத்மினி, V., முசிரி. 332. புருஷோத்தமன், G. S., சேலம். 333. பாரி ராவுத்தர், G. K.. ஆர்க்காடு. 334. பத்மா, S., சென்னை-4. 335. பழனிசாமி, A. K., சலக்காடு. 336. பழனியப்பன், N., பள்ளத்தூர். 337. பக்கிரிசாமி, V., திருத்தருப்பூண்டி. 338. பட்டாபிராமன், N., திருச்சிராப்பள்ளி. 339. பத்மநாபன், M. P. P., சென்னை-4 340. பத்மாவதி, P., மாயூரம். 341. பழனிசாமி, T. S., பெருந்துறை. 342. பழனிசாமி, V. R., ஒடைப்பட்டி. 343. பரிபூர்ணம், பெரிய காஞ்சீபுரம். 344. பதி, A. U., சென்னை-5. 345. பாஹுத், M. I. M., மாவநெல்லா. சிலோன். 346. பூவண்ணன், G., ரங்கூன். 347. பத்மாவதி, G., பூவளூர்.

(R) 457. ராமசந்திரன், K., ஒதிக்காடு. 458. ராமசந்திரன், L., கும்பகோணம். 459. ராஜாராமன், T. S., கும்பகோணம். 460. ராஜேஸ்வரி, A., வளவனூர். 461. ரவிகாந்த், N., கும்பகோணம். 462. ராஜேந்திரன், A., மதுரை. 463. ராஜா, M. V., சென்னை-17. 464. ராஜா, K., நம்புலியூர். 465. ராஜகுமாரி, V., சென்னை-4. 466. ராமசேஷன், G., காஞ்சிபுரம். 467. ராமமூர்த்தி, T. N., திருத்தருப்பூண்டி. 468. ராஜேந்திரன், S., கொழும்பு.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேணடுமே. பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★

கூட்டாளி

"நடனு"

எதிரே தோன்றிய மனிதனைப் பார்த்ததும், சின்னத் தம்பிக்குத் தூக்கிவாரிப் போட்டது. ரசித்துக் குடித்துக்கொண்டிருந்த டீ கிளாஸ் கை நழுவி விழுந்ததைக்கூட மறந்து, அப்படியே மரம்போல் நின்று விட்டான். தன்னை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கும் ஆறுமுகத்தின் கண்களில் படாமல், தப்பி ஓடி வந்து வேண்டுமென்று அவன் மனம் துடித்தது. ஆனால் ஆறுமுகம் நெருங்கிவிட்டான்.

"என்னடா தம்பி! ஆளே கண்ணுலே அம்புடமாட்டேங்கறே? நம்ப 'முதலில்லா வியாபார'த்துப் பழைய கூட்டாளியாச்சே நீ! கும்பிடப்போன தெய்வம்.."

"உஷ். இங்கெல்லாம் சத்தம் போடாதே அண்ணே!" என்று அடக்கிவிட்டு, அந்த டீக்கடையைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டான் சின்னத் தம்பி.

மூன்று, நான்கு பேர்கள் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். மணி இரண்டாகும் சமயம். அநேகமாக எல்லோரும் ஆபீஸுக்குச் சென்று விட்டதால் அதிகக் கூட்டமில்லை. ஆறுமுகத்தை ஒரு மூலைக்கு அழைத்து சென்றான் சின்னத் தம்பி. தனக்கும் ஆறுமுகத்திற்கும் ஆளுக்கொரு டீயை வாங்கி, அவனிடம் ஒன்று கொடுத்து விட்டு, தானும் உட்கார்ந்தான்.

"ஏய்...சின்னத்தம்பி! இந்த நாலு வருஷத்துக்குள்ளே நீ ரொம்ப வளர்ந்திருக்கே! ஆபீஸ் பையன்னு பேரா இருந்தாலும் மானேஜருக்கு அடுத்தபடி நீ தானேடா!"

"என்னமோ! கௌரவமாய்க் காலம் தள்ளறேன்."

"நீ நம்ப பழய கூட்டாளியாச்சே! நம்ப பழய வேலையெல்லாம் மறந்துட்டியா?" என்று பேசிக்கொண்டே போனன் ஆறுமுகம்.

சின்னத்தம்பியின் நெஞ்சினுள் ஐஸ்கட்டி அப்படியே இறங்குவது போலிருந்தது. பழய சம்பவம் அவன் கையில் வைத்துக்கொண்டிருந்த கிளாஸில் தெரிவது போலிருந்தது.

* * *

நாலு வருஷத்துக்கு முன்பும் அவன் ஆபீஸ் பையன்தான். அப்பொழுது ரொம்பவும் சின்னப் பையன். திடுக்கிடும் வேலைகளைச் செய்ய வேண்டும் என்னும் ஆவல். அதே தெருவில் அவன் வீட்டிற்குப் பக்கத்திலிருந்த ஆறுமுகம் அவனைத் தாஜா செய்து, தூண்டி, ஆபீஸ் உளவுகளை அறிந்து கொண்டான். திருடுவது ரொம்ப

வீரத்தனமான காரியம் என்றும், ஏராளமாகப் பணம் கிடைக்கும் என்றும் ஆசைகாட்டி, அவனை யும் அழைத்துச் சென்முன்.

திருடப்போன இடத்தில் துரதிருஷ்டவசமாக இருக்க நேர்ந்த மானேஜிங் டைரக்டரை மிருகத்தனமாகத் தாக்கி விட்டான் ஆறுமுகம். அவர் மண்டை உடைந்து ரத்த வெள்ளத்தில் கிடந்த காட்சி..அப்பா சின்னத்தம்பிக்கு நடுக்கம் கண்டு விட்டது. அவர்கள் தப்ப முயல்வதற்குள்ளாகப் பிடிபட்டுவிட்டார்கள். ஆறுமுகத்திற்கு நாலு வருஷம். கூட இருந்த சின்னத்தம்பிக்கு ஒரு வருஷம்!

* * *

அவன் முதல் தவறு அதுதான். கடைசியும் அதுதான் எனத் தீர்மானமாக முடிவு செய்து கொண்டான் சின்னத்தம்பி. இந்தப் பாவி மறுபடியும் வந்துவிட்டானே!

"அண்ணே! நீ டைரக்டரை அந்த மாதிரி அடித்திருக்கக் கூடாது. அவரு செத்துப்போயிருந்தா உன் கதி என்ன ஆகும்?"

"அது கிடக்கு விடு! இப்ப மாத்திரம் என்ன! அந்தப் 'பணத் தொந்தியை' என் அடுத்த விருந்தாகத் தீர்மானம் செய்திருக்கேன்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் ஆறுமுகம்.

சின்னத் தம்பிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கோபமாகப் பேச வாயைத் திறந்தவன், பிறகு அடக்கிக் கொண்டான்.

"ஏய் சின்னத்தம்பி! நீ கௌரவமா, சௌக்கியமா இருக்கே! நான் மட்டும் கஷ்டப்படணுமா?"

"நீயும் கௌரவமா, சௌக்கியமா இரு, நானு வேணுங்கறேன்?"

"சரி! ஆயிரம் ரூபாய் கொடு. பிறகு உன் மூஞ்சியிலேயே முழிக்காமெ போயிடறேன்?"

"ஆயிரமா? நான் எங்கே போறது?"

"விளையாடாதேடா! சுண்டைக்காய்!..நீ இப்படியே கௌரவமாக் காலம் கழிக்கணும்னு, எனக்கு ஏதாவது ஏற்பாடு செய்து கொடுத்தாகணும். இல்லே....உன் கம்பெனி மானேஜரிலேருந்து, ஊரிலே இருக்கிற ஒவ்வொரு குழந்தை கிட்டேயும் உன் பழைய விஷயத்தைச் சொல்லி...."

"போதும், போதும்! நிறுத்து, எனக்கு யோசிக்கக் கொஞ்சம் டயம் கொடு" என்முன் சின்னத் தம்பி.

"ஐந்தாம் தேதி சனிக்கிழமை சாயங்காலம் ஏழு மணிக்கு இதே ஓட்டல்லே காத்துக்கிட்டிருப்பேன். தவருமே வந்து சேரு" அதிகாரத்துடன் கூறிவிட்டு, 'டங்'கென்று கிளாஸை மேஜை மேல் வைத்துவிட்டு, முடுக்காக நடந்து சென்முன் ஆறுமுகம். என்ன செய்வது எனத் தெரியாமல்

பலவித யோசனைகளில் குழம்பிய படியே ஆபீஸை நோக்கி நடந் தான் சின்னத்தம்பி.

* * *

அன்று சனிக்கிழமை!

ஆறுமுகம் ஆறு மணிக்கே ஆஜ ராகிவிட்டான். டீக் கடையில் குட்டிபோட்ட பூனை போல் அங்குமிங்கும் நடந்தான்.

கடைசியாகச் சின்னத்தம்பி வந்து சேர்ந்தான் சாவதான மாக. அவன் முகத்திலே பழய பயம் தோன்றவில்லை.

"ஒரு பெரிய விருந்துக்கு ஏற் பாடு செஞ்சுட்டு வந்தேன்.. நீ தயாரா?"

"நான் ஆறு மணிலேருந்து காத்துக்கிட்டிருக்கேனே!"

"சரி கிளம்பு" என்று நடந்தான் சின்னத்தம்பி. "எங்கேடா கூட் டிக்கிட்டுப் போறே? இங்கேயே கொடுத்துடு. பரவாயில்லை" என்று கையை நீட்டினான் ஆறு முகம்.

"அண்ணே! எங்கிட்டே ஏது ரூபாய்? பணம் ஒண்ணும் கொண்டு வரல்லை. ஆனா கிடைக்கிறதுக்கு ஒரு ஏற்பாட்டோடே வந்திருக் கேன், இஷ்டமா சொல்லு?"

"பணம் கிடைக்கிறது எந்த வழியா இருந்தாலும் ரெடிடா, தம்பி. சொல்லு....எங்கே?"

"எங்க கம்பெனியேதான். திங் கள்கிழமை சம்பளத்திற்காக ரொக்கம், இன்று வந்து இரும்புப் பெட்டியிலே கிடக்கு. நீ கேட் டது ஆயிரம்தான். அதிலே பத் தாயிரம் இருக்கு. உனக்குத் தேவையானதை நீ எடுத் துக்கலாம். முடியுமா?"

"பாலை வேண்டாங்கிற பூனை உண்டா? அதுக்கும் தயாராகத் தான் வந்தி ருக்கேன்."

"நீ மறக் காமெ இருக் கணும்னு தானே இது செய்யறேன். இந்தா? முன் கதவுச் சாவி, கையிலே

வச்சுக்கோ.”

“தம்பி! நீ எல்லாம் முன்னுடியே யோசிச்சுத் தயார் பண்ணி-”

“உஷ்..சத்தம் போடாதே. இடம் வந்துட்டுது.”

அந்தத் தெருவில் நடமாட்டமே இல்லை. ஆயினும் முன்

ஜாக்கிரதையாகத் தெருவின் இரு பக்கமும் கவனித்துவிட்டு, எதிரே நின்ற பெரிய கட்டிடத்தின் வாசலை யடைந்தனர் இருவரும்.

“அண்ணே நான் இங்கேயே நின்று கவனிச்சுக்கறேன். நீ அந்தச் சாவியாலே கதவைத் திறந்துகொண்டு உள்ளே போ. எதிரே பெரிய ஹாலிருக்கு. அதிலே இடது பக்கத்திலே மூணுவது ரூமுக்குள்ளே தான் இருக்கு இரும்புப் பெட்டி. லைட் டைப் போடாதே. சப்தம் கேட்காமல் ஜாக்கிரதையா வேலையை முடிச்சுக் கிட்டு, சீக்கிரமாத் திரும்பிடு.”

சின்னத்தம்பி அங்கேயே நின்றுவிட்டான். ஆறுமுகம் மெதுவாக நடந்து சென்று, கதவைத் திறந்தான். பூனைபோல் நடந்து ஹாலில் நுழைந்தான்.

நான்கு வருஷங்களுக்குப் பிறகு, மறுபடி தனது தொழிலைச் செய்யப்போகும் அவனுக்குச் சுறுசுறுப்பும் தெம்பும் உண்டாயிற்று. பெட்டிக்குள்ளிருப்பதை அப்படியே காலி செய்து கொண்டு வந்துவிட்டால், கொஞ்ச நாளைக்காவது நிம்மதியாக இருக்கலாம் எனத் திருப்தியடைந்தது அவன் மனம். சின்னத் தம்பியை மனத்துக்குள் வாழ்த்தினுன்.

ஏதோ நகருவதுபோல் ஓர் உணர்ச்சி தோன்றவே திடுக்கிட்டு அப்படியே மூச்சை அடக்கிக் கொண்டு நின்றுன். ஒன்றுமில்லை எனத் தெரிந்தவுடன், சமா

தானப் படுத்திக்கொண்டான். எதிரே இருந்தது மூன்ருவது அறை. அதுவும் பூட்டித்தானிருந்தது. 'அதற்குச் சாவி இல்லையே, என்ன செய்வது!'—ஒரு நிமிஷம் தான் யோசனை. உடனே மடியிலிருந்த தனது ஆயுதங்களை எடுத்தான். ஐந்தே நிமிஷம்தான் வேலை. பூட்டு திறந்து கொண்டது. மடியிலிருந்த 'டார்ச்' விளக்கை எடுத்து எதிரே காட்டினன். அறையின் கோடியிலிருந்த இரும்புப்பெட்டி தெரிந்தது. விளக்கை அணைத்துவிட்டு, அடி மேல் அடி வைத்து இரும்புப் பெட்டியை நெருங்கினன்.

பழய காலத்துப் பெட்டி, திறப்பது ரொம்பச் சுலபம் என அவன் மனம் நிம்மதியடைந்தது. பணமே கைக்கு வந்துவிட்ட மாதிரி சந்தோஷம் ஏற்பட்டது. ஆயுதங்களைக் கையிலெடுத்துக் கொண்டு, கைப்பிடியில் கையை வைத்து, மெதுவாக அதன் பூட்டுகளை ஆராயத் தொடங்கினன் ஆறுமுகம். அவன் மனம் பெட்டியைத் திறப்பதிலேயே லயித்திருந்தது.

தோள்மீது ஏதோ ஊர்வது போலிருந்தது. திடுக்கிட்டுத் திரும்பினன் ஆறுமுகம். நான்கு முரட்டுக் கரங்கள் அவனை நகரவிடாமல் இருபக்கமும் இரும்புப் பிடியாகப் பிடித்து இறுக்கின. பிடியிலிருந்து திமிறிக்கொண்டே, "சின்னத்தம்பி! போலீஸ், போலீஸ்!" என்று கத்தினன்.

திடீரென்று எல்லா எலெக்டிரிக் விளக்குகளும் எரிந்தன. தன்னைச் சுற்றி நோக்கினன் ஆறுமுகம். இரு போலீஸ்காரர்கள் அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தனர். இன்ஸ்பெக்டரும் அவரோடு மற்ருெரு மனிதரும் வந்தனர். அந்த மனிதரைக் கவனித்தான் ஆறுமுகம். பளபளவென்று வழுக்கையுடனிருந்த அவர் மண்டையிலே, பலத்த அடியினல் ஏற்பட்ட பெரிய வடு நன்ருகத் தெரிந்தது. தன் கையினல் நான்கு வருஷத்திற்கு முன் ஏற்பட்டதுதான் அது என்பதைத் தெரிந்துகொள்ள அதிக நேரம் ஆகவில்லை ஆறுமுகத்துக்கு. அவன் மனம் சிறிதுதான் குழம்பியது. உடனே பளிச்சென்று விளங்கிவிட்டது எல்லாம். "திருடன்....கருங்காலி! காட்டிக் கொடுத்துவிட்டான், சின்னத் தம்பி!" என்று கத்தினன் அவன்.

"சீ! வாயை மூடு. திருட்டுப் பயலே. நல்ல பையனைக் கெடுத்து ஜெயிலுக்கு அனுப்பின அயோக்கியனே! ஜெயிலிலிருந்து வந்ததும் என்னிடம் உண்மையைச் சொல்லிக் கதறினன் அந்தப் பையன். மன்னித்து மறுபடி வேலை கொடுத்தேன். இதுவும் என்னுடைய கம்பெனிதான். மறுபடி நீ என்னைச் சீக்கிரமே கவனிப்பதாகச் சொன்னயல்லவா? நானே கவனித்து விட்டேன்.. ..உம்..இன்ஸ்பெக்டர் அழைத்துச் செல்லுங்கள், அந்தத் திருட்டு நாயை.." என்ருர் டைரக்டர்.

திருதிருவென விழித்துக் கொண்டிருந்த ஆறுமுகத்தைத் தள்ளிக்கொண்டு சென்றனர் போலீஸார். தலையைக் குனிந்து கொண்டே நடந்தான் ஆறுமுகம்.

பாலகுமார்
கதை: ஆர்வி சித்திரம்: ஸாமி
குரங்குத் தோலு
இது என்ன?
இவர்கள் சர்க்கஸ்காரர்களா? கொள்ளைக்காரர்களா?
அவன் பதூன்! வேடிக்கை செய்கிறன்!
இதில் ஏதோ சூது இருக்கிறது! வாருங்கள் போகலாம்!
முதலில் குள்ளனை ப்பிடித்தால் போதும்!
இங்கே இவ்வாறிக்க, பாலகுமார் என்ன ஆனன் என்று பார்ப்போம் . . . .
கட்டை அவிழ்த்து விடு!
யார் இங்கே? ஒருவரும் இல்லையா?
தம்பி! ஜாக்கிரதையாய் இரு!
சர்க்கஸுக்கு நேரமாயிட்டுது!
வா, போகலாம்!

(தொடரும்)

தூண்டில் முள்

தங்கமணி

"..புழுவுக்காக ஆசைப்பட்டு, தூண்டில் முள்ளை விழுங்கி உயிர் வேதனைப்படும் மீனுயிருக்க நான் ஒப்பவில்லை.."

* * *

தனது அன்புத் தம்பியான பூபாவின் உடைகளை நன்குத் தோய்த்துப் பிழிந்து, கொடிக் கயிற்றில் ஒவ்வொன்ருக உலரப் போட்டுக்கொண்டிருந்தாள், சூடாமணி.

அந்தச் சமயம், "சூடாமணி.." என்று அழைத்தவாறே அங்கே, வந்தார் திருவேங்கடம். "என்ன அண்ணு! இன்னும் ஆபீசுக்குப் போகவில்லையா?" என்று சிறிது பரபரப்புடன் கேட்டாள் சூடாமணி. அவளை எறிட்டுப் பார்த்தார் திருவேங்கடம்; தன் தலையைப் பிடித்துக்கொண்டே, "ஹூம்! எல்லாம் உன்னுல் வரும் தொல்லை தான்!" என்று அலுத்துக் கொண்டார்.

சூடாமணிக்குக் கண்கள் கலங்கின. அவளுக்குத் தன் அண்ணனின் கவலைக்குக் காரணம் தெரியும். என்ருலும் ஒன்றும் அறியாதவளைப்போல, "இம்··நேரமாகிறதே..வா, அண்ணு! பலகாரம் சாப்பிடலாம்" என்று ஆதரத்துடன் அழைத்தாள்.

"ஆமாம் போ! பலகாரமும், மண்ணுங்கட்டியும்.. சூடாமணி! இனிமேலும் சகித்துக்கொள்ள என்னுல் முடியாதம்மா! நான் எங்கேயாவது தொலைந்து போகிறேன். நீயும் உன் தம்பியும் எக்கேடாவது கெட்டுப்போங்கள்!" என்று படபடப்பாகக் கூறிக்கொண்டே அப்படியும் இப்படியுமாக எழுந்து உலாவினுர்.

சூடாமணிக்கு உள்ளம் கலங்கியது. வேதனையைப் பொறுக்க முடியவில்லை. கண்ணில் நீர் முட்டியது. அவள் தாவணித் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து, திருவேங்கடத்தைத் தயவுடன் நோக்கினுள்.

"அண்ணு, அவன் நம்முடைய தம்பி. உங்களையும், என்னையும் விட்டால் அவனுக்கு வேறு யார் அண்ணு கதி..? இப்போது என்ன தவறு பண்ணிவிட்டான்..?" என்று கண்கள் கலங்கக் கேட்டாள் சூடாமணி.

"என்ன பண்ணிவிட்டானு?.. நேற்றிரவு எழு, எழரை மணிக்கு, எதிர் வீட்டு டாக்டர் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்து, சில்லறை வாங்கிக்கொண்டு வரச் சொன்னுராம். இது வரைக்கும் ஆளையே காணுமாம்! நேற்றிரவிலிருந்து வீட்டுக்கும் வரக்காணும்! எப்படியிருக்கிறது, நம் அருமைத் தம்பியின் போக்கிரித் தனம்?" என்று கூறிவிட்டு, தலையில் அடித்துக் கொண்டார், திருவேங்கடம்.

சூடாமணி, சற்று நேரம் வரை மௌனமாயிருந்தாள். பிறகு,

கத்தினாள், சூடாமணி. அவர் பதில் எதும் சொல்லவில்லை; திரும்பிக் கூடப் பார்க்காமல், அவர் போய்விட்டார்!

சிறிது நேரமாயிற்று.

"அக்கா.." இந்தக் குரலைக் கேட்டு சூடாமணி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"அண்ணா ஆபீசுக்குப் போய் விட்டாரா?.." என்று கேட்டுக் கொண்டே, தோட்டத்து மதில் சுவரின் மீதிருந்து 'டபக்' கென்று கீழே குதித்தான், பூபாலன். அவனைக் கண்டதும் சூடாமணிக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவளையும் அறியாமல் அவள் கண்ணில் நீர் துளித்தது. அதைக் கண்ட பூபாலன் முகத்தைச் சுளித்துக்கொண்டே, "ஹூம்! வந்ததும் வராததுமாக எதுக்கு அக்கா, அழறே?" என்று அவள் அருகில் வந்து நின்றான்.

சூடாமணி கண்களைத் துடைத்துக்கொண்டாள்; குமுறிப் பொங்கிய அழுகையைச் சமாளித்துக் கொண்டாள்; பூபாலனை எதிட்டு நோக்கினாள்.

"டேய், நேற்று ராத்திரியிலிருந்து எங்கேயடா போயிருந்தாய்?"

"எங்கேயோ போயிருந்தேன்! எனக்குப் பசியெடுக்கிறது. வா, முதலில் எனக்குச் சாதம் போடு." என்று கூறினான் பூபாலன்.

"அண்ணா, இந்த ஒரு தடவை எனக்காக அவனை மன்னித்துக் கொள்ளுங்கள். இன்னும் கொஞ்ச நாளில் அவனை எப்படியும் திருத்தி விட என்னால் முடியும்! அவன் நிச்சயம் திருந்திவிடுவான்!" என்று உறுதி தொனிக்கச் சொன்னாள், சூடாமணி. திருவேங்கடத்திற்கு இருப்புக் கொள்ளவில்லை.

"சரி, சரி! நீ இப்படி செல்லம் காட்டிக் காட்டித்தான் அவன் குட்டிச்சுவராய்ப் போனான்! திருந்தி விடுவானாம், திருந்தி!.. பார்க்கலாம்!" முறுக்கு நொறுக்கினாற் போலப் பேசிவிட்டு, அங்கிருந்து விர்ரென வெளியே போய் விட்டார், திருவேங்கடம். "அண்ணா! பலகாரம்.." என்று

சூடாமணி ஒரு கொடி நேரம் யோசித்தாள். "அண்ணு ஆபீசுக்குப்போய்விட்டார். வா, பலகாரம் போடுகிறேன்" என்று அன்புடன் கூறி, பூபாலனை வீட்டுக்குள் அழைத்துப் போனுள்; அவனைக் குளிப்பாட்டினுள்; உடுத்தினுள்; பலகாரம் கொடுத்தாள். மிச்சம் மீதியாயிருந்த அத்தனை இட்டிலிகளையும் பூபாலன் ஒரு கை பார்த்தான். கடைசியாக இரண்டு டம்ளர் காபியையும் உறிஞ்சி இழுத்தான். இத்தனை நேரமும் மௌனமாயிருந்த சூடாமணி, அப்போதுதான் வாயைத் திறந்தாள்.

"ஏண்டா, கண்ணு! நேற்றிரவு, எதிர் வீட்டு டாக்டர்.."

"உஸ்! டாக்டராவது, டைரக்டராவது! அந்தப் பேச்செல்லாம் வேண்டாம்! இன்றைக்கு, நான் சினிமாவுக்குப் போகவேண்டும். அவசரமாக ஒரு இரண்டு ரூபாய் வேண்டும். கொடு" என்றுன் அதிகாரமாக. சூடாமணி மனத்தைச் சாந்தப் படுத்திக்கொண்டாள். அவனை அன்புடன் நோக்கி, பெற்றெடுத்த அம்மாவுக்கு நிகராகக்கேட்டாள்:

"தம்பி, இந்தப் போக்கிரித்தனமெல்லாம் வேண்டாமடா. நான் சொல்வதைக் கேள். மானத்தோடு வாழ்ந்த குடும்பத்தில் பிறந்து.."

"அக்கா! இதெல்லாம் வேண்டாம். இப்போது, பணம் தரப் போகிருயா, இல்லையா?"

"உன் போக்கிரித்தனத்தைப் பற்றிக் கண்ட கண்ட பேர்கள், கண்ட கண்ட மாதிரிப் பேசுவதைக் கேட்கும்போது.."

"உனக்கும், அண்ணனுக்கும் உயிரே..பொசுங்கிப் போகிறதாகும்! பணம் கேட்டால்..சட்!" அருகிலிருந்த கண்ணுடி அலமாரியை ஓங்கி உதைத்துக் கீழே தள்ளிவிட்டு, அங்கிருந்து வேகமாக வெளியே ஓடினுன் பூபாலன்!

சூடாமணி பதுமையானுள். அவளுக்கு ஒரே குழப்பமாகி விட்டது. 'இவன் என்ன பிறவியோ! என்னதான் சொன்னுலும்..ஒரு துளியாவது அசைந்து கொடுக்கமாட்டேன் என்கிருனே. அண்ணன் என்னடா என்ருல் வீட்டைவிட்டு விரட்டியடித்தால் தான் திருந்துவான் என்கிருர். ரத்தத்துடன் ரத்தமாய்ப் பிறந்து வளர்ந்து வருபவனை எப்படித்தான் அநாதையாய்த் துரத்திவிட முடியும்!..' என்று என்ன என்ன வெல்லாமோ சிந்தித்தபடியே, வெகு நேரம் வரைக்கும் கட்டிலிலேயே கிடந்தாள் சூடாமணி. அப்புறம் அவள் ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்!

என்ன தீர்மானம்..?

* * *

இரவு ஒன்பது மணி இருக்கும். எங்கெங்கேயோ சோம்பேறிப் பையனுய் அலைந்து, திரிந்து, அலுத்துக் களைத்து வீட்டுக்கு வந்தான் பூபாலன். "அக்கா!.." என்று மெதுவாகக் குரல் கொடுத்து, வாசல் கதவை லேசாகத் தட்டினுன்.

பதில் இல்லை!

பூபாலன், ஓரிரு விநாடிகள் மௌனமாய் நின்ருன். பிறகு மீண்டும், "அக்கா! அக்கா!.." என்று இரண்டு மூன்று தடவை கூப்பிட்டான்; நாலைந்து தடவை கதவைத் தட்டினுன்.

அப்போதும் யாதொரு சப்தத்தையும் காணோம்!

பூபாலன் விழித்தான். 'சினிமாவுக்குப் போய்த்தொலைந்திருக்கிறார்களோ!' என்று எண்ணிக்கொண்டே, இருளில் நின்றபடியே சுற்றுமுற்றும் பார்த்தான். அப்போது, அடுத்த வீட்டு அல்லி, அவனிடம் வந்தாள்.

"உன் அக்கா, சாயந்தரமாக எங்கேயோ வெளியே போனாள். உன் அண்ணன் வந்தால் இந்தச் சாவியைக் கொடுக்கச் சொன்னாள்" என்று கொஞ்சம் எட்டியே நின்று கூறிவிட்டு, ஒரு சாவியைப் பூபாலனின் காலடியில் வீசி எறிந்துவிட்டு ஓடிப்போனாள். அவளுக்கு அவ்வளவு பயம் அவனிடம்.

பூபாலன் தயங்கவில்லை. தன் காலடியில் விழுந்த சாவியை எடுத்தான்; கதவைத் திறந்து உள்ளே போனான்; மின்சார விளக்கின் பித்தானைத் தட்டினான்; நேரே சமையல் அறைக்குச் சென்றான். என்ன என்ன இருக்கிறது என்று கிளறினான். கோதுமை இருந்தது. அரிசி இருந்தது. மளிகைக் கடைச் சரக்கெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் இருந்தன. ஆனால்..சோறுதான் இல்லை!

பூபாலனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது! வேறு வழியில்லாமல் பாயை எடுத்து விரித்துப் படுத்தான். சோர்வு தீரத் தூங்கினான்.

பொழுது விடிந்து எவ்வளவோ நேரமாயிற்று. பூபாலன் இன்ன

மும் விழித்தெழவில்லை. அவன் அயர்ந்து உறங்கிக்கொண் டிருந்தான். தூக்கத்தில் ஒரு கனவு—'ஒரு தூண்டில்முள். அந்த முள் தெரியாமல் புழுவைச் செருகி மறைத்திருந்தது. அது தெரியாமல் முள்ளை விழுங்கிய இரண்டு மீன்கள் உயிர் வேதனைப் படுகின்றன..' இதுபோன்ற கனவைக் கண்டுகொண் டிருந்த பூபாலன் 'டங்! டக..டக..டக..டக' என்ற பெரும் சப்தத்தால் திடுக்கிட்டான்! கண் விழித்துப் பார்த்தான். அங்கே இரண்டு கறுப்புப் பூனைகள் சண்டைபோட்டுக் கொண் டிருந்தன. மற்றப்படி, அந்த வீட்டில் வேறு சப்தமே காணவில்லை. ஒரே சூன்யமாய்க் காட்சியளித்தது!

பூபாலன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

பூபாலன் அந்த வீடு முழுவதையும் சுற்றிச் சுற்றி வந்தான். அக்காவையும் காணோம்; அண்ணனையும் காணோம்!

அவன் திகைத்தான்!

அந்தச் சமயத்தில் சுவர்க்கடிகாரம், 'டாங், டாங்..' என்று ஒலித்தது. பூபாலன் கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தான். மணி பதினொன்று!

"தபால்!" என்று வாசலிலிருந்து கிளம்பிய தபால்காரன் குரலைக் கேட்டதும், வாசலுக்கு வந்து கடிதத்தை வாங்கினான். மேல் விலாசத்தைப் பார்த்தான். அது அவன் அக்கா சூடாமணியின் பெயருக்கு வந்திருந்தது. கையெழுத்தைக் கவனித்தான். சந்தேகமே இல்லை! அது, அவனுடைய அண்ணன் திருவேங்கடத்தின் கையெழுத்தே!

பூபாலன் அசந்தே போய்விட்டான். அவசர அவசரமாக உறையைக் கிழித்து, கடிதத்தை உருவி எடுத்துப் படித்தான்:

"அன்புள்ள தங்கை சூடாமணிக்கு: நம் குடும்பத்தின் அவமானச் சின்னமான பூபாலனை, அன்பினால் திருத்திவிட முடியுமானால் திருத்து. நான் கம்பெனி சார்பில் திருவாங்கூருக்குப் போகிறேன். வர நாலைந்து மாதங்களாகும். தம்பி என்பதற்காக அந்தத் திருட்டுக் கழுதையுடன் மாரடித்துக் கொண்டிருக்க என்னாலாகாது! புழுவுக்காக ஆசைப்பட்டுத் தூண்டில் முள்ளை விழுங்கி உயிர் வேதனைப்படும் மீனாயிருக்க நான் ஒப்பவில்லை.."

மேலும், அந்தக் கடிதத்தைப் படிக்கப் பூபாலனுக்கு மனம் ஓடவில்லை. அவன் அந்தக் கடிதத்தைத் தாறுமாறாய்க் கிழித்தெறிந்தான். மறுகணம்—

"சார், தபால்!.." திரும்பி வந்து தபால்காரன் பூபாலனிடம் இன்னொரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனான்!

பூபாலன் திகைத்தான்! திகைத்தவாறே கடிதத்தைக் கவனித்தான். அது அவன் அண்ணன் பெயருக்கு, அவன் அக்கா எழுதிய கடிதம்!

பூபாலனுக்கு மண்டை குழம்பியது. அவன் அதையும் படித்துப் பார்த்தான்:

"அன்புள்ள அண்ணாவுக்கு, அன்புகெட்ட முரடனான பூபாலனை அன்பினால் திருத்திவிட முடியும் என்றுதான் நம்பினேன். ஆனால் அது முடியாத

காரியம் என்று தெரிந்துகொண்டேன். அடியும் உதையும்தான் அவனைத் திருத்தவேண்டும். எப்படியாயினும் அவன் திருந்துவானாகில் போதும். நிற்க,

நான், நம் பெரியப்பா வீட்டுக்கு வந்து விட்டேன். அவன் உங்களிடம் படும் சித்திரவதையை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. 'தம்பி' என்ற புழுவைச் செருகிய தூண்டில் முள்தான் அவன் என்றாலும்....''

மேலும் அந்தக் கடிதத்தைப் படிக்க முடியாமல் திணறினான் பூபாலன். ஏனெனில் காலையில் கண்ட அந்தக் கனவு, இந்த இரண்டு கடிதங்களிலும், தன்னை ஒரு **'தூண்டில் முள்'** என்று உதாரணம் காட்டி எழுதியிருப்பது - மேலும் அவர்களிருவரும் தனக்காகவே வீட்டை விட்டுப் போயிருப்பது - இவைகள் அவன் உள்ளத்தை என்னவோ பண்ணின.

மறுபடியும் படுக்கையில் போய்த் தொப்பென்று படுத்தான். அவன் மனம், ''நானா, தூண்டில் முள்?'' என்று ஆயிரம் தடவை கேட்டது.

அவன் தீப்பட்டவனைப் போலத் துள்ளி எழுந்தான். இத்தனை காலமாகத் தன்னை மனம் கோணாமல் காப்பாற்றி வந்த தன் சொந்த அண்ணனும் அக்காவுமே.. தன்னை வெறுப்பதை உணர்ந்ததும், அவன் மனம் திடுமென்று அதிர்ந்தது! சுழன்றது! தூண்டில் முள் எவ்வளவு கொடியது.

கொஞ்ச நேரமாயிற்று. அவன் என்ன முடிவுக்கு வந்தானோ? உடனே, வீட்டை விட்டுக் கிளம்பினான், நான்கைந்து மைல் தூரத்திலுள்ள தன் பெரியப்பாவின் வீட்டிற்கு நடையாய் நடந்துவந்து சேர்ந்தான். தன் அக்கா சூடாமணியைக் கண்டான். கதறினான்! ''அக்கா! நானா தூண்டில் முள்? நானா அக்கா தூண்டில் முள்? சத்தியமாக இனி உங்கள் மனம் கோணாமல் நடப்பேன்!'' என்று கூவிப் புலம்பினான். அவனுடைய மனமாற்றத்தை உணர்ந்த சூடாமணி திகைத்தாள்! ஓடோடி வந்தாள். அவன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவள் சொன்னாள்:

''தம்பி, நீ தூண்டில் முள் அல்ல; தும்பைப் பூ!..'' என்றாள்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் தபால்

தகப்பனார் கடிதம்

அன்புடையீர்,

வணக்கம். கண்ணன் தீபாவளி மலர் வந்தது. என் குழந்தைகளிடம் போய், "இங்கே கொடுங்கள்; நான் முதலில் பார்த்துவிட்டுத் தருகிறேன்'' என்று சொல்லி வாங்கினேன்.

உபஜனாதிபதியின் ஆசியுடன் ஆரம்பிக்கும் மலர் ஓர் அரிய பொக்கிஷத்தையே அடக்கிக் கொண்டிருக்கிறது. ராஜாஜியின் 'கொழுக்கட்டை' கதை மிக அருமையாக இருக்கிறது. மலர் பூராவையும் படித்துவிட்டுத்தான் அவர்களிடம் கொடுத்தேன். அவ்வளவு சுவாரஸ்யம்! கதைகள் ஒவ்வொன்றும் மணி மணியாக மிகச் சிரமப்பட்டுப் பொறுக்கி எடுத்து வெளியிட்டிருக்கிறீர்கள். தமிழ் நாட்டுக் குழந்தைகள் அதிர்ஷ்டசாலிகள்தான்!

—R. S. குஞ்சிதபாதம், F/o K. வரதராஜன், மணல்மேடு.

தாயின் கடிதம்

ஆசிரியர் அவர்களுக்கு,

சிரஞ்சீவி ராஜாமணியின் தாயார் நான். கண்ணன் தீபாவளி மலர் கிடைத்ததும் என்ன பரபரப்பு; சந்தோஷம், போங்கள் அவனுக்கு! எனக்கும் அப்படித்தான். "புஸ்வாணம் ஜாக்கிரதை!'' என்ற படத்தை என்னை வெட்டி ஒட்டித் தரச் சொன்னான்.

நானும் படித்தேன். அதைப் படித்து முடித்ததும் எனக்குப் பத்து வயதுப் பெண்ணாக மாறிவிட்டதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது.

நீங்கள் மிக அருமையாக வெளியிட்ட மலருக்கு நன்றி. உங்கள் தொண்டு வளர்க! —K. ராஜம்மாள், பெங்களூர்.

ரஸிகரின் கடிதம்

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

நமஸ்காரம். 'கண்ணன்' தீபாவளி மலரைத் தீந்தேனினும் இனிப்பாகக் கற்கண்டைவிட ருசியாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள்! என் மலையாள நண்பர் ஒருவர் மலரைப் பார்த்துவிட்டு ஆச்சரிய மிகுதியால் அப்படியே ஸ்தம்பித்துவிட்டார். "இது தமிழ்ப் பத்ரமாணோ?'' என்று அவர் கேட்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு அழகாக ஆங்கிலத்தைத் தவிர வேறு பாஷைகளில் பத்திரிகைகள் வெளிவர முடியாது என்பது அவர் அபிப்பிராயம். நல்ல விஷயங்களைச் சேகரித்துக் கலைக் களஞ்சியமாகத் தயாரித்திருக்கிறீர்களே! தங்களுக்கு என் பாராட்டுதல்கள்!

—K. A. நம்பி, கிருஷ்ணன்கோயில், நாகர்கோயில்.

ஆசிரியரின் கடிதம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். தங்களுடைய மலர் தமிழ் மணம் கமழ்கிறது. தலைவர் ராஜாஜி பட்டாஸ் கட்டைவிட, பக்தி செய்வதில் நாட்டம் வேண்டும் என்று கதையாகக் கூறுவது என் கருத்தைக் கவர்ந்துவிட்டது. மலரில் உள்ள ஒவ்வொரு அம்சமும் குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் அமைந்திருப்பது கண்டு உங்களை வாழ்த்துகிறேன். ஆசிரியர்களின் அன்பு உரித்தாகுக. —கே. வேதாசலம், நெம்மேலி.

Reg. No. M. 5542

புதிய கண்ணன் வெளியீடுகள்

விளையும் பயிர்

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

நம்மிடையே வாழ்ந்த, வாழுகின்ற பெரியோர்கள் உங்களைப்போலிருந்த காலத்தில் எப்படி இருந்தார்கள்? எப்படி விளையாடினார்கள்? எப்படிப் படித்தார்கள்? என்ன என்ன குறும்புத்தனங்கள் செய்தார்கள்? இதையெல்லாம் நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? அவற்றிலிருந்து நாம் எவ்வளவோ அறிந்துகொள்ளலாமே! காந்திஜி, நேருஜி, டாகுர், பாரதியார், ராஜேந்திரப் பிரஸாத், ஆஸாத், டாக்டர் சாமிநாதையர் முதலிய பெரியார்களுடைய விளையாட்டுப் பருவத்து நிகழ்ச்சிகளைச் சுவைபட, கதைபோல ஆசிரியர் வர்ணிக்கிறார். அருமையான புத்தகம்; அவசியம் படிக்கவேண்டிய புத்தகம்.

விலை 8 அணா

விஞ்ஞானம் பேசுகிறது

ஆசிரியர்கள்:

பே. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

நாம் தினசரி பல பொருள்களை உபயோகப் படுத்துகிறோம். பல பொருள்களின் உபயோகங்களையும் உணர்ந்திருக்கிறோம். அவை எப்படி வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா? மொத்தம் 12 பொருள்களைப்பற்றி இதில் சித்திரங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. அதைக் கண்டுபிடித்தவர் யார், அதன் உபயோகம் என்ன - இவை போன்ற விஷயங்களை எல்லாம் குழந்தைகள் தினசரி அரைமணி நேரம் செலவிட்டால் போதும்; 12 நாட்களில் தெரிந்துகொண்டுவிடலாம். விலை மலிவு; பயன் அதிகம்.

விலை 8 அணா

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.